பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விழுயல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 14, புதன்கிழமை 28.06.2017 கதிர் 234

## இராணுவத் தளபதிக்கு பதவி, தர உயர்வு

இலங்கையின் இராணுவத் தளபதியாக இதுவரை பணியாற்றிய லெப்டினனட் ஜெனரல் கிருஷாந்த டி.சில்வா நான்கு நட்சத்திர ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளமையுடன் கூட்டுப் படைகளின் தளபதியாகவும் ஜனாதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(முன்னர் வந்த செய்தி 7 ஆம் பக்கத்தில்)

# தற்காலிகமாக இருவருக்கு நாளை அமைச்சர் பதவி?



## அனந்தி, சர்வேஸ்வரனுக்கு பெரும்பாலும் வழங்கப்படும்



யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாண சபையில் வெற்றிடமாகவுள்ள இரு அமைச்சர் பதவிகளையும் அனந்தி சசிதரன் மற்றும் சர்வேஸ்வரன் ஆகியோருக்குத் தற்காலிகமாக வழங்குவது குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றார் என்று அவருடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.

அவர்கள் இருவரும் பெரும்பாலும் நாளை ஆளுநர் ரெஜினோல்ட் குரே முன்னிலையில் பதவி யேற்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பக்கம் 18 »»

## சம்பந்தன் மற்றும் கட்சித் தலைவர்களுடன் பேசிய பின்பே விக்கி இறுதி முடிவாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

மாகாண சபையின் இரு அமைச்சர் பதவிகளுக்கு தற்காலிக அடிப்படையில் இருவரை நியமித்தாலும் –

இவ்விடயம்தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடனும்கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும்ஏனைய பங்காளிக் கட்சித் தலைவருடனும் நேரில் சந்தித்துப் பேசிய பின்பே ஓர் இறுதி முடிவை முதல்வர் விக்னேஸ்வரன் எடுப்பார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

பக்கம் 18 »»

## வித்தியா படுகொலை வழக்கு விசாரணை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 28

வித்தியா படுகொலை வழக்கின் தொடர் விசாரணை யாழ்ப்பாணத்தில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட மேல் நீதிமன்ற ஆயத்தில் இன்று ஆரம்பமாகவிருக்கின்றது.

இன்று, நாளை, நாளை மறுதினம் அதன் பின்னர் அடுத்த திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் தொடர்ந்து

பக்கம் 18 »»

## அமைச்சர்களை நியமிப்பவன் நானே! முதல்வர் விக்னேஸ்வரன் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

"வடக்கு மாகாண சபையில் அமைச்சர்களுக்கான வெற்றிடங்கள் உரிய நேரத்தில் என்னால் நிரப்பப்படும்."

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் இருவரின் பதவிகள் வெற்றிடமாகியுள்ள நிலையில் –

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் ஓர் அமைச்சர் இராஜினாமாச்செய்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்குத் தமது கட்சியைச் சேர்ந்த ஒருவரை இலங்

பக்கம் 18 »»

## இரணைதீவு மக்களுடன் நேரில் பேசுவதற்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இன்று அங்கு!

### மாவை, சிறிதரன், சரா ஆகியோரும் செல்வர்

கொழும்பு, ஜூன் 28

தங்களின் சொந்த மண்ணுக்குத் தாங்கள் திரும்பிச்செல்வதற்குதங்களை அனுமதிக்க வேண்டும் என்று கோரி இரணைதீவு மக்கள் முழங்காவில் இரணைப்பாலையில் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தி வருகையில் –

இன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்களின் ஏற்பாட்டில் அந்த

பக்கம் 18 »»

## சகல அமைச்சர்களையும் விசாரிக்க மாகாண சபையின் தெரிவுக் குழு!

### அடுத்த அமர்வுக்கு வருகின்றது பிரேரணை

வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட அனைத்து அமைச்சர்கள்,அமைச்சுகள்,திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகிய தரப்புக்களினால் முன்னெடுக்கப் பட்டவைஎனக்கூறப்படும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக விசாரித்து வடக்கு மாகாண சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சபையின் தெரிவுக் குழு ஒன்றை நியமிப்பதற்கானபிரேரணைஒன்றுக்கு சபையில் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மாகாண சபையின் இலங் கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினரான அ.பரஞ்சோதி இத்தகைய

பக்கம் 18 »»

## யாழில் வயோதிப மாது கொலை; குற்றவாளிக்கு மரண தண்டனை!

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு அவரது வீட்டுவளவிலேயே புதைக்

பக்கம் 18 »»

## கிளிநொச்சியில் முன்பள்ளியின் கூரை காற்றில் தூக்கி வீசப்பட்டது

### ஆசிரியர்கள், மாணவர்கள் அருந்தப்பு

கிளிநொச்சி, ஜூன் 28

கிளிநொச்சி, உதய நகரில் அமைந்துள்ள சிறுவர் முன்பள்ளியின் கூரைகள் நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் வீசிய பலத்த காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன. வீசப்படும்போது மூன்று ஆசிரியர்களும் முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும் கட்டடத்துக்குள் இருந்

பக்கம் 18 »»



அளப்ப அருணாசலம்



தற்காலிக ஏற்பாடு நிரந்தரப் பிளவுக்கு வழி செய்யாட்டிச் சரிதான்...!

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கொலை

## சூட்டுச் சம்பவத்தை விபத்து எனக் காட்ட முயன்ற சூத்திரதாரியைக் கண்டுபிடிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 28

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்துக்கு முதல் தகவல் அறிக்கை வேண்டுமென்றே தவறாக வழங்கப்பட்டதா? அப்படி வழங்கப்பட்டதாயின் அது தொடர்பில்

பக்கம் 18 »»



## காரைநகரிலுள்ள கிணறுகளில் இருந்து படையினர் நன்னீர் எடுக்க முடியாது

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா அதிரடி உத்தரவு

பொன்னாலை, ஜூன் 28

காரைநகர் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் இருந்து படையினர் நன்னீர் எடுத்துச் செல்கின்றமையை உடனடியாக நிறுத்த வேண்டும் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்அதிரடியாகஉத்தர

பக்கம் 18 »»



# புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவில் திரண்ட பக்தர் கூட்டம்






வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா புளியங்குளம், புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது, பக்த அடியார்கள் காலை முதல் தூக்குக் காவடி, பால் காவடி எடுத்தும் தீச்சட்டி ஏந்தியும், அங்க பிரதிஷ்டை செய்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

விழாவுக்கு நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வருகை தந்தனர். அவர்கள், ஆலய வழிபாட்டிலும் பொங்கல் நிகழ்விலும் கலந்து கொண்டனர்.

## முதலாவது கடற்கலம் இன்று வெள்ளோட்டம்

பெரிய ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை நிர்மாணிக்கும்வேலைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட முதலாவது கடற்கலம் வெள்ளோட்டம் இடப்படவுள்ளது.

சீநோர் நிறுவனம் தயாரித்த முதலாவது ஆழ்கடல் மீன்பிடிப் படகு இன்று நீர்கொழும்பு கடலில் வெள்ளோட்டம் இடப்படும்.

கடற்றொழில் நீரியவள அமைச்சர் மஹிந்த அமரவீர பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

கடற்றொழில் துறையில் பயன்படுத்தப்படும் சிறியளவிலான கடற்கலங்களுக்குப் பதிலாக நவீன வசதிகள் கொண்ட பெரிய கடற்கலங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கானதிட்டத்தை கடற்றொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது. சீநோர் என்ற அரச நிறுவனம் இத்தகைய ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளைத் தயாரித்து வருகிறது. ஒரு படகின் பெறுமதி ஏழு கோடி ரூபா. இதற்குரிய செலவில் அரைவாசியை அரசு பொறுப்பேற்கவுள்ளது.

மீன்களைப் பிடிப்பதற்கு வலைகளைப் பயன்படுத்தாமல், சர்வதேச அங்கீகாரம் பெற்ற பொறிமுறையை உபயோகப்படுத்தும் வகையில் கடற்கலங்கள் தயாரிக்கப்படுகின்றன. பிடிக்கப்பட்ட கடல் உணவுகளின் தரம் குறையாமல் சேமித்து வைக்கக் கூடிய களஞ்சிய வசதிகளும் அவற்றில் உள்ளன.

# இனங்கண்ட பகுதிகளில் கழிவுகள் கொட்ட இடையூறு ஏற்படுத்தினால் கடும் நடவடிக்கை!

## பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டார் ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 28

உள்ளூராட்சி நிறுவனங்களால் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் கழிவுகள் கொட்டப்படும் போது அதற்கு இடையூறு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக உயர்ந்தபட்சசட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு உத்தரவிட்டுள்ளார். அத்துடன், குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தல் தொடர்பான மற்றுமொரு கலந்துரையாடல் ஜனாதிபதி தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கழிவுகளை மீள் சுழற்சி செய்தல், வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட பிரதேசங்களில் குப்பைகளை அகற்றுதல், குறுகிய காலத்தில் சேதனப் பசளை உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களை அறிமுகப்படுத்தல், கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தலுக்காகத் தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல், கழிவு முகாமைத்துவம் தொடர்பாக மக்களைத் தெளிவூட்டல், பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையைக் குறைத்தல் தொடர்பான வர்த்தமானியை வெளியிடல் மற்றும் கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தல் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக மக்களுக்குப் போதியளவில் தெளிவூட்டப்படாமையே பல பிரச்சினைகளுக்கும் பிரதான காரணமாகும் என்று இதன்போது சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கழிவுகளை வகைப்படுத்தல் தொடர்பாக விரிவான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு நகரின் கழிவு முகாமைத்துவத்தின் தற்போதைய நிலை தொடர்பாக கொழும்பு மாநகர ஆணையாளர் இதன்போது கருத்துத் தெரிவித்தார். அத்துடன், கொழும்பு நகரின் கழிவுகளை வெளியேற்றலுக்கான பொறுப்பை ஜனாதிபதி மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரியவிடம் கையளித்துள்ளார்.

மேலும் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளின்போது உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதியிடம் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அவசியமான இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் போன்ற பல்வேறு வேண்டுகோள்களும் இதன்போது முன்வைக்கப்பட்டன. (எ)

# ஹெல உறுமய ஒற்றனா? மறுக்கிறார் கம்மன்பில!



கொழும்பு, ஜூன் 28

ஜாதிக ஹெல உறுமயவில் ஒற்றராகச் செயற்பட்டேன் என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை பிவிதுரு ஹெல உறுமயவின் செயலாளர் உதய கம்மன்பில மறுத்துள்ளார்.

எனினும், ஜாதிக ஹெல உறுமயவில் மற்றும் ஓர் உறுப்பினர் ஒற்றராக செயற்பட்டார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர்மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அதிகாரியாகச் செயற்பட்ட ஒருவர் 1988 ஆம் ஆண்டில் ஜாதிக ஹெல உறுமயவில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அவர் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் பரிந்துரையின் கீழ் கட்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் எம்மை எவ்வாறு ஒற்றர் என்று கூற முடியும்?

இதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேன போட்டியிடவுள்ளார் என்று அத்துரலியே ரத்ன தேரர் எம்மிடம், முன் கூட்டியே அறிவித்த போதும் நான் அதனை இரகசியமாகப் பேணியுள்ளேன்.- என்றார். (எ)

# அம்புலன்ஸ் சாரதிகள் நேற்று முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் அவதி




பிரதான மூன்று கோரிக்கைகளை முன்வைத்து, நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்ற, அம்புலன்ஸ் சாரதிகளின் பணிப்புறக்கணிப்பால் வடக்கில் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர்.

அகில இலங்கை மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கத்தின் வவுனியா மாவட்டத்தின் தலைவர் டி.ஜி. சரத் குமாரசிறி தலைமையில் வவுனியாவில்பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதாரத் திணைக்களச் சாரதிகள் 11 பேருக்கு வேறு திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை ரத்து செய்ய வேண்டும். சகல மாகாணங்களிலும்சுகாதாரத் திணைக்களக சாரதிகள் அத்திணைக்களங்களில் மாத்திரமே பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

சுகாதார மத்திய அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கு அமைவாக அமைச்சரின் உத்தரவை மாகாண சுகாதாரத் திணைக்களங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் மாகாண சுகாதாரத் திணைக்களச் சாரதிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை வவுனியா மாவட்டம் 49, கிளிநொச்சி மாவட்டம் 32, யாழ்ப்பாண மாவட்டம் 63, முல்லைத்தீவு மாவட்டம் 39, மன்னார் மாவட்டம் 39 ஆகியஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதாரத் திணைக்களக சாரதிகள் 222 பேர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதேவேளை, பணிப்புறக்கணிப்பு நாள்களில் அவசர சேவைகள் வழமைபோல் முன்னெடுக்கப்படும் என்று அகில இலங்கை மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது. (எ-100)

### சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைந்த வழக்கு

# நொதேர்ண் பவர் நிறுவன அதிகாரிகள் நேற்று மன்றில் முற்படுத்தப்படவில்லை

## வழக்கு செப்டெம்பர் 29 வரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

சுன்னாகத்தில் நிலத்தடி நீர் மாசடைந்தமைக்கு காரணமானது எனக் கருதப்படும் மின் உற்பத்தி நிறுவனத்தின் அதிகாரிகள் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படாத நிலையில் அந்த வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி வழக்கு நேற்று மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ. யூட்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முன்னதாக, இந்த வழக்கு கடந்த மே மாதம் 30 ஆம் திகதி இதே நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சுன்னாகத்திலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலப்பதற்குக் காரணமான மின் உற்பத்தி நிறுவனத்தைக் கண்டறிந்து அந்த நிறுவன அதிகாரிகளை சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஊடாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு நேற்று மன்றில் முற்படுத்தப்படவில்லை.

நேற்று சுன்னாகம் நொதேர்ண் பவர் மின்னுற்பத்தி நிறுவனம் சார்பாக மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி டிலான் பிலிப்ஸ், சுன்னாகம் நிலத்தடி நீர் மாசு தொடர்பான வழக்குகள் மேல் நீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றத்திலும் நிலுவையிலுள்ளமையால், மல்லாகம் நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறு நீதிவானிடம் கோரினார். இதன் அடிப்படையிலேயே குறித்த வழக்கு விசாரணையை நீதிவான் ஒத்திவைத்தார்.

மேலும், நீர் மாசு தொடர்பான தற்போதைய நிலைமைகளை ஆராய்ந்து மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுற்றுச்சூழல் அதிகார சபையின் அதிகாரிகளுக்கு நீதிவான் நேற்று உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகமும், சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவும், மானிப்பாய் சமுர்த்தி வங்கியும் இணைந்து நடத்திய சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வு ஊர்வலம் கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் சமுர்த்தி வங்கியில் ஆரம்பிக்கப்பட்டு மருதடி விநாயகர் ஆலய முன்றிலைச் சென்றடைந்தது. இதில் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி, மானிப்பாய் மெமோறியல் பாடசாலை மாணவர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் போன்றோர் கலந்துகொண்டனர். (ம)

# தரம் ஒன்றில் மாணவர் அனுமதிக்கு விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டது

## கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது

கொழும்பு, ஜூன் 28

பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கான விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தவை வருமாறு:-

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2018 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தை எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னர் இறுதி விண்ணப்ப தினமாக ஜூன் மாதம் 30 ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. மக்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தத் திகதியை நீடிக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் எனக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் விண்ணப்பங்களை நேரடியாக அதிபர்களிடம் கையளிக்க முடியும். கையளித்தமை தொடர்பில் பாடசாலை நிர்வாகம் வழங்குகின்ற ஆவணத்தையும் பெற்றோர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அல்லது பதிவுத் தபால் மூலமாக இன்றிலிருந்து (நேற்று) இரண்டு வாரங்களுக்குள் அனுப்பிவைக்க முடியும். -எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஊடகவியலாளர்களுக்கு புலமைப்பரிசில்

கொழும்பு, ஜூன் 28

ஊடக அமைச்சு வருடாந்தம் வழங்கிவரும் "அசிதிசி ஊடக புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வருடாந்தம் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் இம்முறையும் வழங்கப்படவுள்ளன.

ஊடகவியலாளர்களுக்கு தமது தொழிற்துறை ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்கு வழிவகை செய்யும் வகையில் அசிதிசி என்ற இந்த ஊடக புலைமைப்பரிசில் திட்டத்திற்கு இம்முறையும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

3 வருட கால சேவையை பூர்த்திசெய்த அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல், அச்சு ஊடகம் ஆகியவற்றில் நாடளாவிய ரீதியில் பணியாற்றும் 18 தொடக்கம் 55 வயதிற்கு இடைப்பட்ட முழு நேர மற்றும் பகுதிநேர ஊடகவியலாளர்கள், மாகாண ஊடகவியலாளர்கள், இணையத்தள ஊடகவியலாளர்கள் ஆகியோர் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு தமது கற்கை நெறிக்காக ஆகக்கூடியது ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும். ஏற்கனவே அசிதிசி புலமைப்பரிசில் பெற்றோருக்கு இது வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் பணிப்பாளர் (ஊடகம்), நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, இலக்கம் 163, கிருலப்பனை அவனியூ, பொல்ஹேங்கொட, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0112513645, 0112513459, 0112513460 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்புகொள்ள முடியும். மேலும், www.media.gov.lk (https://tamil.media.gov.lk) என்ற இணையத்தளத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். (ம)

### காரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற

# ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்கு வராத பொலிஸாரிடம் விளக்கம் கோர முடிவு

பொன்னாலை, ஜூன் 28

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது அங்கு பொலிஸார் பிரசன்னமாகியிருக்காமை தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் விளக்கம் கோரவேண்டும் என இணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதேச செயலாளரைக் கேட்டுக்கொண்டார்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது காரைநகர் பிரதேச சபைச் செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸார், கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகள் வருகை தரவில்லை.

இந்நிலையில், காரைநகரில் இருந்து கால்நடைகள் கடத்தப்படும் விடயம் மேற்படிக் கூட்டத்தில் சூடு பிடித்தது. பொன்னாலைச் சந்தியூடாக இரவில் கால்நடைகள் கடத்தப்படுகின்றன.

அத்துடன், ஊரிகடல் ஊடாக கால்நடைகளைக் கொண்டு சென்று அராலியில் கரையேற்றியும் காரைநகர் சிவன்கோயிலடிக் கடல் ஊடாகக் கொண்டு சென்று பொன்னாலையில் கரையேற்றியும் கால்நடைகள் கடத்தப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தவிடயத்தில் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இன்று முக்கியமான கூட்டம் நடைபெறுகின்றது. இதில் பொலிஸார் உட்பட துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் வருகை தரவில்லை என மக்களால் விசனம் வெளியிடப்பட்டது.

இதன்போது இந்தக் கூட்டத்தில் பங்குபற்றாமை தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரியிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்புமாறு இணைத் தலைவர் ஈ.சரவணபவன் பிரதேச செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார். (ம)

# சைவபரிபாலனசபை இன்று நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 28

சைவபரிபாலன சபை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கல்லூரி வீதி, நீராவியடியில் உள்ள சபையின் நாவலர் ஆசிரம மண்டபத்தில் சபைத் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆசியுரை நிகழ்த்துவார்.

தலைமை உரையை சைவ பரிபாலன சபைத் தலைவர் இ.வசந்தசேனனும், சிறப்புச் சொற்பொழிவை ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆலோசகரும், இந்து சமயக் கலாசார ஆன்மீகப் பிரசாரகருமான கலைமாமணி ஆசிரியர் திலகம், சிவநெறிச் செல்வர் விஸ்வமகாதேவனும், "திருவாதவூரடிகள்" எனும் தலைப்பில் யாழ்ப்பாணம், கந்தபுராண கலாசார மன்றச் செயலாளர் வே.சிவகுருநாதனும், ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலய ஆசிரியர் திருமதி சண்முகலிங்கன் அவர்களின் பேச்சும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் திருமுறை ஓதலை யாழ். ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலய மாணவர்களும், திருவாசகம் ஓதலை இ.குகதாசனும், "மாணிக்கவாசக சுவாமிகளின் அற்புதம்" எனும் தலைப்பில் கதை கூறலை வ.சானுஜனும் நிகழ்த்துவர். மேலும், யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் பேச்சும் இடம்பெறும்.

அத்துடன், யாழின் பிரபல துரையப்பா குழுவினரின் பக்திப் பாடல்களும், யாழ். மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா அவர்களின் தலைமையில் வினாடி வினா போட்டியும் இடம்பெறும் என சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான பரிசில்களை சைவபரிபாலன சபை நிர்வாகசபை உறுப்பினர் வ.வரதராசா வழங்குவார். (உ)

### தற்காலிகமாக...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

யில், அவருக்குத் தமிழரசுக் கட்சியின் சார்பிலான அமைச்சர் பதவியை வழங்குவதற்குக் கட்சி இணங்காது என்றும் -

எனினும், இவ்விடயம் குறித்துக் கட்சியின் பொதுச் செயலாளரே நிர்வாகிகளுடன் கதைத்து, ஒரு முடிவு எடுத்து அறிவிக்க வல்லவர் என்றும் -

அப்போது மாவை சேனாதிராசா முதல்வருக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

எனினும் -

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பிலான தெரிவாக இல்லாமல் தனது வேலைப் பளுவைக் குறைப்பதற்கான நடவடிக்கையாகத் தனது பிரதிநிதிகள் என்ற முறையில் அனந்திக்கும், சர்வேஸ்வரனுக்கும் இந்தப் பொறுப்பை முதலமைச்சர் தற்காலிக அடிப்படையில் ஒப்படைப்பார் எனக் கூறப்பட்டது.

தற்போதைய அமைச்சுக்களில் சில மாற்றங்களைச் செய்தே இந்த ஒப்படைப்பு நடவடிக்கையை முதல்வர் மேற்கொள்வார் என்று கூறப்பட்டது.

ஏற்கனவே பதவியில் இருக்கும் அமைச்சர்களின் அமைச்சுக்கள் மற்றும் துறைகளில் கூட மாற்றங்களை ஏற்படுத்தும் முடிவை முதல்வர் எடுக்கலாம் என்றும் -

தற்போது பதவியில் இருக்கும் இரு அமைச்சர்கள் தொடர்பான - கடந்தகால விடயங்களை ஒட்டிய - தமது ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படக்கூடிய - விசாரணைகளுக்கு இடைஞ்சல் இல்லாத நிலைமையை உருவாக்குவதற்காக அமைச்சுப் பொறுப்பு மாற்றங்களை முதல்வர் நாடக்கூடும் என்றும் கூறப்பட்டது. (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சம்பந்தர் - விக்கி சந்திப்பதே தேவை

வடக்கு மாகாண சபையில் ஆளும் தரப்புக்குள் வெடித்த பூகம்பம் வெளியில் அடங்கியது போலத் தென்பட்டாலும், உள்ளே கனன்று கொண்டே - அதிர்ந்து கொண்டே - இருக்கின்றது.

முன்னிலும் மோசமாக அது மீண்டும் வெடிக்கக் கூடிய ஏது நிலை தென்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சாண் ஏறினால் முழம் சறுக்கிய மாதிரி, முறுகல் நிலையும் முரண்பாடும் மேலும் மேலும் தீவிரமாகிக் கொண்டிருக்கின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராசாவை முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன் நேரில் தேடிப் போய்ச் சந்தித்தமையுடன் எல்லாம் ஆற்றுப்படுத்தப்பட்டு விடும், சுமுக நிலையை நோக்கி நகரும் என்றெல்லாம் நம்பினோம்.

ஆனால், அடுத்த நாள் முதலமைச்சர் வெளியிட்ட நன்றிக் கடிதத்தில் பிரதிபலித்த தமிழ்த் தேசிய சிந்தனை எழுச்சியும், ஐக்கியச் செயற்பாடு பற்றி உரைக்காத அவரின் நிலைப்பாடும் இணக்கத்துக்கான வாய்ப்பு அருகி, பிணக்குக்கான சூழலே தீவிரமடைகின்றது என்ற செய்தியைத் தெரிவித்தன.

அதனை உறுதிப்படுத்துவது போல, பதவி இழந்த அமைச்சர் குருகுலராஜாவின் இடத்துக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆனோல்டைத் தெரிவு செய்தமையும் -

பதவியில் இருக்கும் மற்றைய இரு அமைச்சர்களும், முதலமைச்சரின் உத்தேச விசாரணைக்குழு குறித்து வெளியிட்ட கருத்துகளும் - அமைந்தன.

ஆரம்பம் முதலே முதல்வருடன் நெருங்கி - இணங்கி - போகாதவர் ஆனோல்ட். நிச்சயமாக அவரது தெரிவு தமக்கு நெருக்கடி தரும் ஒர் ஏற்பாடுதான் என்று முதல்வர் விக்னேஸ்வரன் உணருவார். அந்தத் தெரிவு அவரை அதிருப்திக்கு உள்ளாக்குவதாக இருந்திருக்கும் என்பது உணரற்பாலதே.

அதேசமயம், அமைச்சர்கள் சத்தியலிங்கம், டெனீஸ்வரன் ஆகியோர் தொடர்பில் அவர்கள் சார்பாக வெளியிடப்பட்டிருக்கும் கருத்துகள் இந்த முரண் நிலையை மேலும் தீவிரமடைய வைக்கும் என்பது நிச்சயம்.

மேற்படி இரு அமைச்சர்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு நால்வர் கொண்ட விசாரணைக்குழு ஒன்றை முதலமைச்சர் நியமிக்க இருக்கின்றார் என்ற தகவல் வெளியான சூழலில், அது குறித்து அந்த அமைச்சர்கள் பக்கத்திலிருந்து காட்டமான கருத்துகள் வந்துள்ளன.

முதலமைச்சர் நியமிக்கும் மேற்படி புதிய விசாரணைக்குழுவுக்கு முன்னால் தாங்கள் ஆஜராக மாட்டார்கள் என்றும், அதன் விசாரணைகளுக்குத் தாங்கள் ஒத்துழைக்கப் போவதில்லை என்றும் அவர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன், முதல்வர் விக்னேஸ்வரன் கடிதம் மூலம் - எழுத்தில் - சில உடன்பாடுகளை - இணக்கங்களை - கண்டுள்ளார். அதன்படி, முதல்வர் செயற்படவேண்டும், செயற்படவில்லை என்று சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சார்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

'சட்டப்படியான, சுயாதீனமான விசாரணைக்குழு மூலம் நடத்தப்படும் விசாரணைக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும்' என்ற ஏற்பாடே சம்பந்தனுடன் காணப்பட்ட இணக்கமாகும்.

முதல்வர் தமக்கு ஆலோசனை கூறவும் பரிந்துரைக்கவும் நியமிக்கும் குழு எல்லாம் 'சட்டப்படியான, சுயாதீனமான' குழு அல்ல என்பதே சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் வாதமாகும்.

'சட்டப்படியான, சுயாதீனமான' குழு எது என்பது மாகாண சபைகள் சட்டத்தில் உள்ளது. வடக்கு மாகாண சபை நியமிக்கும் தெரிவுக்குழு அது. அத்தகைய தெரிவுக்குழு ஒன்றை நியமித்து, அதன் மூலம் ஊழல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள், தவறுகள், மோசடிகள் குறித்து விசாரிக்கப்படுமானால் அதற்கு முழு ஒத்துழைப்புத் தருவோம், கட்டுப்பட்டு நடப்போம் என்பதே அந்த இரு அமைச்சர்களினதும் நிலைப்பாடு.

அதனைத் தவறு என்றும் கூறமுடியாது. ஏனெனில், தற்போது முதல்வர் புதிதாக அமைக்க நியமித்தமை போன்ற ஒரு குழுவையே - தமக்கு ஆலோசனை மற்றும் பரிந்துரை தருகின்ற ஒரு விசாரணையையே - முதல்வர் முன்னர் நியமித்திருந்தார். சட்ட வலுவற்ற அந்தக் குழு நடத்திய விசாரணையும், அதன் பரிந்துரையும், அந்தப் பரிந்துரை முடிவுகளுக்கு வந்த விதம் பற்றிய அதன் அறிக்கையும் இன்று சந்தி சிரிக்கும் நிலைக்கு உள்ளாகி விட்டது. அந்த அறிக்கையின் 'சித்துவம்'தான் இத்தகைய அர்த்தமற்ற குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் கால்கோள். தகுதியற்ற - லாயக்கற்ற - ஒழுங்கற்ற - அத்தகைய இன்னொரு குழு தேவையா என்பதை முதல்வர் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

அது மட்டுமல்ல, வடக்கு மாகாண சபைக்குள் எழுந்த பிரச்சினையைத் தீர்த்து வைப்பது தொடர்பில் தாம் கடைசியாக முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் முத்தாய்ப்பாக கூறிய ஒரு விடயத்தை முதல்வருக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

"நாம் வெகுவிரைவில் சந்தித்து பல பிரச்சினைகள் தொடர்பில் மேலதிகமான கலந்துரையாடலில் ஈடுபட எதிர்பார்க்கிறேன்." - என்று தெரிவித்திருந்தார் சம்பந்தர்.

முதல்வர் இனி எந்த முடிவும் - நகர்வும் - எடுக்க முன்னர் அதைச் செய்தால் என்ன? ஜேர்மன் சென்றிருக்கும் சம்பந்தன் ஓரிரு நாள்களில் நாடு திரும்பிவிடுவார். அவர் வந்த பின்னர், அவரை நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினால் நிரந்தர இணக்கத்துக்கு வழி பிறக்காதா? முதல்வர் முயற்சித்தால் என்ன? அதனையே மக்களும் எதிர்பார்கிறார்கள்.

# நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்க இடமளியோம்!

## உறுதிபடத் தெரிவித்தார் நீதி அமைச்சர்



கொழும்பு, ஜூன் 28

நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்க சில தரப்பினர் முயன்று வருகின்றனர். அதற்கு ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

தெஹிவளையில் நேற்றுமுன்தினம் ஸ்ரீமகா போதி விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட தர்ம சாலாவை திறந்து வைத்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் மதச் சுதந்திரத்தை தற்போதைய அரசு இல்லாமல் செய்துவிட்டது என்று கூறி, கடந்த வாரம் விக்ரமபாகு கருணாரத்ன தலைமையில் எட்டு பேர் புறக் கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவ்வாறு பதாகைகளைக்காட்டி, அவற்றை உலகம் முழுவதும் அனுப்பும் போதுதான் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பணம் கிடைக்கின்றது. இதற்குப் பதிலாக அவர்கள் பிச்சையெடுக்கலாம்.

இவ்வாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் தயவில் வாழ்பவர்கள், கடந்த நாள்களில் என் மீதும் அமைச்சர் சம்பிக்க மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். ஞானசார தேரரை நாம் ஒளித்துவைத்திருந்தோம் எனக் கூறினர். அவருக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டுமாயின் நாட்டில் 10 ஆயிரத்து 500 பௌத்த விகாரைகள் உள்ளன. அவர் எமது வீடுகளில் இருந்துவிட்டு நீதிமன்றில் சரணடைய வில்லை.

இவ்வாறு எமது நாட்டில் தோல்வியடைந்த சிலர் நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். இதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம்.- என்றார். (எ)

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 15,682 புதிய வீடுகள் தேவை

## செயலகப் புள்ளி விவரத் தகவல் கூறுகிறது

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு 15 ஆயிரத்து 682 புதிய வீடுகள் தேவை என்று மாவட்ட செயலக புள்ளி விவரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 136 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 41 ஆயிரத்து 367 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் இது வரைக்கும் 19 ஆயிரத்து 565 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. பகுதியளவில் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 418 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட மக்களில் பலர், குடும்ப உறுப்பினர்களை இழந்த நிலையில், ஒன்று மற்றும் இரண்டு அங்கத்தவரைக் கொண்ட குடும்பங்களாக மாறியவர்களுக்கு இதுவரை வீட்டுத் திட்டங்களில் வீடுகள் வழங்கப்படவில்லை.

அவர்களுடன், புள்ளித் திட்டங்கள் காரணமாக உள்வாங்கப்படுவதில் அதிகமான குடும்பங்கள் தகுதி பெறத் தவறியுள்ளமையால், பல குடும்பங்களுக்கு இது வரை வீட்டுத்திட்டம் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

அத்துடன், மீள்குடியேற்றத்தின் பின்னர் திருமணம் செய்து கொண்ட பல குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. ஒட்டுமொத்தமாக இன்னமும் 15 ஆயிரத்து 682 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

2 ஆயிரத்து 657 குடும்பங்களின் பகுதியளவில் சேதமற்ற வீடுகளும் திருத்தப்பட வேண்டியுள்ளன.

இதற்கமைய, மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 990 வீடுகளும், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 175 வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 136 வீடுகளும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 5 ஆயிரத்து 168 வீடுகளும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 616 வீடுகளும், வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 597 வீடுகளும் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 489 வீடுகளும், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 25 வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 3 ஆயிரத்து 180 வீடுகளும், கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 4 ஆயிரத்து 929 வீடுகளும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 6 ஆயிரத்து 870 வீடுகளும், வெலி ஓயா பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 72 வீடுகளும் பல்வேறு திட்டங்களுக்கு ஊடாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.- என்றுள்ளது. (எ)

# 'சைட்டம்' தொடர்பான ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை

சைட்டம் எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு ஆதரவாகவும் எதிராகவும் கொழும்பில் நேற்று முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களுக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்த ஆர்ப்பாட்டங்களை நேற்று நடத்தத் தீர்மானிக்கப் பட்டிருந்தது. இந்நிலையில், பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைவாக கொழும்பு பிரதம நீதிவான் லால் ரணசிங்க பண்டார இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த முறை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற அசம்பாவிதங்களை கருத்திற் கொண்டே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், வாழைத் தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகள், ஜனாதிபதி செயலகம் மற்றும் சுகாதார அமைச்சு உள்ளிட்ட பகுதிகளில் நேற்றுக் காலை முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நோயற்ற நீண்ட ஆயுள் பெற்றிட..

- சீனி, உப்பு மற்றும் எண்ணெய் போன்றவற்றின் பாவனையை குறைத்திடுவோம்.
- தினமும் இரண்டு வகை மரக்கறிகள், பச்சை கீரை வகை என்பவற்றை சேர்த்திடுவோம்.
- பழவகைகளில் இரண்டை எடுத்திடுவோம்.
- தினமும் 2 L வரையான சுத்தமான கொதித்தாறிய நீரை பருகிடுவோம்.
- தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்திடுவோம்.

உரிய உயரமும் நிறையும் உங்கள் ஆரோக்கியமான போசாக்கின் அடையாளம்

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகர சபை.

**நாளை**

29.06.2017

வியாழக்கிழமை

நட்சத்திரம்: பூரம் பி.இ. 12.49 வரை

திதி: சஷ்டி மு.இ. 11.21 வரை

சுபநேரம் : 7.26 - 8.56 வரை

இராகுகாலம் : 12.6 - 2.56 வரை

# பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர சிங்களவர்களும் தமிழர்களும் இணங்கியுள்ளனர்!

## அமைச்சர் ராஜித கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 28

பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர சிங்களவர்களும் தமிழர்களும் இணங்கியுள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் முன்னெடுக்கப்படும் அரசமைப்பு மறுசீரமைப்பு செயற்பாடுகளை அதிகாரத்துக்கு வரவேண்டுமென்ற பேராசையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் சீரழித்து வருகின்றனர் என அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றஞ்சாட்டினார்.

புதிய அரசமைப்புக்கான தேசிய அமைப்பு ஹொரண பிரதேசத்தில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையிருந்தாலே யுத்தம் ஏற்படாமல் தடுக்க முடியும் என முன்னெடுக்கப்படும் பிரசாரம் போலியானது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையாலேயே நாட்டில் யுத்தம் ஏற்பட்டது.

நாட்டில் இருக்கும் பிரச்சினை போதாது என்று அரசமைப்பு தொடர்பில் கதைப்பதாகக் கூறி மக்கள் மத்தியில் மேலும் பிரச்சினைகளை வளர்த்து விடுகின்றனர்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றுவது, தேர்தல் முறையை மாற்றுவது, தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உள்ளிட்ட விடயங்கள் அரசமைப்புத் தயாரிப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

இன, மத, குல பிரச்சினைகளை உருவாக்கும் சிலரும் இருக்கின்றனர். மனிதநேயம் கண்டுபிடிக்கப்பட வேண்டியுள்ளது. சில வெளிநாடுகளில் இன, மத, குலம் போன்ற பேதங்கள் பார்ப்பதில்லை.

நாம் ஏகாதிபத்திய முறையையும் விரும்பவில்லை. ஜனநாயகத்துக்கும், சுதந்திரத்துக்குமே நாம் ஆதரவளிக்கின்றோம்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவால் கடந்த 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஏகாதிபத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட ஜனாதிபதி



முறைக்கு நான் அன்றே எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன்.

முன்னாள் ஜனாதிபதி இந்த அரசமைப்பை மாற்றுவதற்கு முயற்சித்து, தனக்கான அதிகாரங்களைக் கூட்டிக் கொண்டார். அதன் பின்னர் அதிகாரங்கள் கூட்டுவதற்கு முன்னின்று செயற்பட்டவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்ற சரத்து மாற்றப்பட்டு, ஜனாதிபதியை விமர்சிக்கக் கூடியவாறான சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

19 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதி தனக்கான அதிகாரங்களைக் குறைத்துள்ளார்.

தேர்தல் முறை மாற்றப்படாவிட்டால், தேர்தலுக்காக பெருமளவு பணம் செலவிட வேண்டி ஏற்படும். சமூகத்தில் பொது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்துக்குக் கிடைக்காமல், முதலாளிமாரே நாடாளுமன்றத்துக்கு வருவார்கள்.

இன, மத அடிப்படையான போராட்டங்களால் நாடு பின்நோக்கிச் சென்றுள்ளது. மனிதநேயம் இல்லாமல் போயுள்ளது என்பதை எவரும் உணரவில்லை. ஏனைய மதங்களைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் இனவாதத்தைப் பரப்பினார்கள். அதன் பின்னர் முஸ்லிம் இனவாதம் உருவானது.

அரசமைப்பை மறுசீரமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்றை இந்த அரசு உருவாக்கியுள்ளது. எனினும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் இதனைச் சீரழிப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

அதிகாரத்துக்கு வர அவர்கள் கொண்டுள்ள பேராசையே இதற்குக் காரணமாகும். வடக்கில் அபிவிருத்தி மேற்கொள்ளும்போது அபிவிருத்தி செய்ய வேண்டாம் எனக் கூற வேண்டும்.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்குக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளது. அதிகாரப் பகிர்வுக்கு சிங்கள மக்களும் விருப்பமாக இருக்கின்றனர்.

இது வரலாற்றில் ஏற்பட்டுள்ள பொன்னான காலமாகும். இதனை தோற்கடிப்பதற்கு சிலர் இன, மத, மொழி வேறுபாட்டைப் பயன்படுத்த முயல்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிரணியினர் விசேட சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிரணியின் தலைவர்கள் விசேட சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன கொழும்பு ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிரணியின் அனைத்து தலைவர்களும் கூடி பேச்சு நடத்தவுள்ளனர்.

உத்தேச அரசமைப்பு தொடர்பில் இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்தப் பேச்சின் போது உத்தேச அரசமைப்பு தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை அறிந்து கொண்டு அதற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும் என தினேஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் வாரத்தில் அரசமைப்பு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் பேச்சு நடத்தப்படவுள்ளது எனவும் கூட்டு எதிர்க்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க)

## புதிய மருந்து உற்பத்தி நிலையம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு!



கண்டி - பல்லேகலயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட Celogen Lanka நிறுவனத்தின் புதிய மருந்து உற்பத்தி நிலையத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்துள்ளார்.

வருடாந்தம் 190 கோடி மருந்து வில்லைகளை உற்பத்தி செய்யும் இலங்கையின் மிகப்பெரிய மருந்து உற்பத்தி நிறுவனம் இதுவாகும்.

இந்த புதிய மருந்து உற்பத்திய நிலையத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி, அதன் உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி பொறிமுறைகளையும் பார்வையிட்டார். இதன்போது சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சர் எஸ்.பி. நாவின்ன, பிரதி அமைச்சர் அசோக்க அபேசிங்க, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, வரையறுக்கப்பட்ட Celogen Lanka நிறுவனத்தின் தலைவர் ஏ.நடராஜா மற்றும் அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

## காலநிலையில் மாற்றம்!

கொழும்பு, ஜூன் 28

தென்மேற்கு பகுதியில் நிலவி வரும் தற்போதைய பருவ காலநிலையில் இன்று தற்காலிகமாக மாற்றம் ஏற்படக்கூடும்என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கு, சப்ரகமுவ, மத்தி, தெற்கு மற்றும் வட மேற்கு மகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

குறிப்பாக கேகாலை, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் சுமார் 75 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியும். வடமத்திய மாகாணத்திலும் ஓரளவு மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ரயில் பாதையில் நடப்பவர்களுக்குத் தண்டம்!

ரயில் பாதையில் நடப்போரை சுற்றி வளைக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட உள்ளன என இலங்கை ரயில்வே பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

தங்களதும் ஏனையவர்களினதும் உயிரை பணயம் வைக்கும் வகையில் ஆபத்தான முறையில் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தி இவ்வாறான



நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

இவ்வாறு ரயில் பாதையில் நடப்போருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படவுள்ளது.

26 பாதுகாப்புப் பிரிவுகளைச் சேர்ந்த 500இற்கும் மேற்பட்டவர்கள் கரையோரப் பாதுகாப்பை இலக்கு வைத்து இந்த சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ள உள்ளனர்.

காலைக்கதிர்



# இன, மத மேலாதிக்கச் செயற்பாடுகளே நாட்டில் பிரச்சினை ஏற்படக் காரணம்!

## கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 28

இந்த நாட்டைப் பீடித்துக் கொண்டிருக்கும் மோசமான வியாதிகளாக இன, மத மேலாதிக்கச் செயற்பாடுகள் உள்ளன. இப்போது நாட்டில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு மேலாதிக்கச் செயற்பாடுகளே காரணமாக அமைந்துள்ளன.

-இவ்வாறு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி தெரிவித்தார்.

திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற 'அல்லறுப்போம்' நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன, மத வேறுபாடுகளால் தான் கடந்த காலங்களில் யுத்தம் ஏற்பட்டது. மக்கள் பல இன்னல்களை அனுபவித்தார்கள். நாட்டில் இரத்த வெள்ளம் ஓடியது. கடந்த கால வலிகள் இன்னும்கூட மக்கள் மனங்களில் இருந்து ஆறவில்லை. இந்த நிலையில், மீண்டும் இனப்பிரச்சினைகள் நாட்டில் தலைதூக்கி உள்ளன.



இனவாதச் செயற்பாடுகள் இருக்கும்வரை, இந்த நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் துன்பங்கள் தீர்க்கப்படமாட்டா. மீனவர் பிரச்சினை, குடிதண்ணீர், மீள்குடியேற்றம், நிலமீட்பு எனஇங்கு வாழ்கின்ற மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் பல தீர்க்கப்படாமலேயே உள்ளன.

இந்த ஆட்சியிலாவது தீர்வு கிடைக்கும் என சிறுபான்மை மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அவர்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறாமலேயே உள்ளன.

எப்போது இந்த நாட்டில் நீதி, உண்மை என்பன நிலைநாட்டப்படுகின்றதோ அப்போதுதான் உண்மையான நல்லாட்சி அமையும்.- என்றார். (ச)

### தண்ணீர் வழங்கப்படாமையால்

## கோறளைப்பற்று மேற்கை சேர்ந்த 500 விவசாயக் குடும்பம் பாதிப்பு!

மட்டக்களப்பு கோறளைப் பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நெற்செய்கை காணிகளுக்கு நீர் வழங்கப்படாமையால், 500 விவசாயக் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

-இவ்வாறு சுதந்திரக் கட்சியின் கல்குடா விவசாய சம்மேளனதலைவர் ஐ.எல்.எம்.முஸ்தபா தெரிவித்தார். மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாகனேரி குளத்திலிருந்து உரிய காலத்தில் சரியான நீர்ப்பாசனம் கிடைக்காத காரணத்தால் சுமார் 25 வீதமான விவசாயக் காணிகளில் நெற்செய்கை பண்ணப்படவில்லை. இதனால் விவசாயக் குடும்பங்களின் வழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

2017ஆம் ஆண்டுக்கானசிறுபோகச்செய்கை தொடர்பான கூட்டம் கிரான் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது, இந்தக் காணிகளுக்கு நெற்செய்கைக்கான நீர்ப்பாசனம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால், நீர்ப்பாசனம் வழங்கப்படவில்லை. இதனால் இந்த நிலங்கள் மாடுகள் மேயும் மேய்ச்சல் நிலங்களாக மாறி வருகின்றன.

இது தொடர்பாக பல அதிகாரிகளின் கவனத்துக்குக்கொண்டு வந்தும் இதுவரை தீர்வு கிடைக்கப் பெறவில்லை. இதனால், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு எதிராகநீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டிய நிலைமைஏற்பட்டுள்ளது. மேலும், இந்த நிலைமை நீடிக்குமாயின் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஜனநாயக ரீதியான கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட முடிவெடுத்துள்ளனர். -என்றார். (ச)

## மீராகேணியில் தோட்டக் காணி இனந்தெரியாதோரால் எரிப்பு!

ஏறாவூர், ஜூன் 28

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராகேணிக் கிராமத்தில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான தோட்டக் காணி ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இனந்தெரியாதோரால் எரித்துத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதனால், அந்தத் தோட்டத்தில் நடப்பட்டிருந்த பயன்தரும் மரங்கள் பல எரிந்து நாசமாகின.

இது தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் அந்தக் காணியின் உரிமையாளர் நேற்று செவ்வாய்க்கிழமை காலைமுறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

கடந்த மாதமும் இந்தக் கிராமத்தில் உள்ள மற்றொரு தோட்டமும் அதன் வேலிகளும் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் இன முறுகலை ஏற்படுத்துவதற்கான சதி முயற்சியா? அல்லது தனிப்பட்ட பகை காரணமாக இடம்பெற்றதா? என்பன தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## 67 தேக்குக் குற்றிகளுடன் டிராக்டர் சாரதி கைதானார்!

மட்டக்களப்பு,ஜூன் 28

மட்டக்களப்பு தொப்பிகலப் பகுதியை அண்மித்த அரச வனப்பகுதி யில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட 67 தேக்கு மரக்குற்றிகள் மற்றும் 3 டிராக்டர்களுடன் சாரதி ஒருவர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.



இதன் போது, சுமார் லட்சம் ரூபா பெறுமதி யானமரக்குற்றிகள் கைப் பற்றப்பட்டுள்ளன என வனத் திணைக்கள புல்லுமலை வட்டார அதிகாரிகள் தெரிவித்தனர். இதன்போது, ஏனைய 2 டிராக்டர் சாரதிகளும் தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## யானை தாக்கி முதியவர் சாவு!

அம்பாறை, ஜூன் 28

அம்பாறை பாணமை, வெதகல வயல்வெளியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

பொத்துவில் பகுதியைச் சேர்ந்த டபிள்யூ.குணபால (வயது -70) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

வயல் காவலுக்குச் செல்லும் வழியிலேயே இவர் யானையால் தாக்கப்பட்டு உயிரிழக்க நேரிட்டது.

பொத்துவில் ஊறணியிலும் முகைதீன் பாவா இப்றாகிம் (42 வயது) என்பவர் கடந்த சனிக்கிழமை யானை தாக்கி உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## 'பெக்கோ'வில் சிக்கி பெண் உயிரிழப்பு!

திருகோணமலை,ஜூன் 28

திருகோணமலை ஹொரவப்பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகல்கடப் பகுதியில் 'பெக்கோ' வாகனத்தில் சிக்குண்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பெண் ஒருவர் உயிரிழந்தார்.

ஜீவனி குமாரி சந்திரதாச (வயது- 37) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சீன நிறுவனம் ஒன்றால் யான் ஓயா குளக்கட்டு நிர்மாணப்பணிமுன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இங்கு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மேற்படி பெண், 'பெக்கோ' இயந்திரத்தால் அள்ளிப் போடப்பட்ட மண்ணில் இருக்கும் மரவேர்களை அகற்றிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென 'பெக்கோ' வாகனத்தில் சிக்குண்டுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த அந்தப் பெண் உடனடியாகப் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இந்தச்சம்பவத்தை அடுத்து, 'பெக்கோ' வாகனச்சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

# எமது காணிகளை இழந்து விட்டால் 'அநாதை'யான சமூகமாகி விடுவோம்!

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



ஏறாவூர், ஜூன் 28

எதிர்காலத்தில் எமக்கென்று ஓர் ஆட்சி முறையை ஏற்படுத்திக்கொள்வதற்காக நாங்கள் காணிகளைப் பாதுகாக்க வேண்டும். எமது காணிகளை இழந்து விட்டால் ஏதுவுமற்ற 'அநாதை'யான சமூகமாக நாம் மாறி விடுவோம்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

ஏறாவூர் கருமாரி அம்மன் ஆலயத்தில் வாயில் கோபுர நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது ஆலயக் காணிகளும் சுவீகரிக்கப்படும் சம்பவங்கள்இடம்பெறுகின்றன. எல்லைக் கிராம ஆலயங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன. சில இடங்களில் ஆலயக் காணிகளை சகோதர இனத்தவர்களுக்குவிற்பனை செய்கின்றார்கள். இவற்றைப் பாதுகாக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு.

இந்த விடயத்தில் எமது மக்கள் அக்கறையாக இருக்க வேண்டும்.

எமது மாவட்டத்தில் பல பிரமாண்டமான ஆலயங்கள் உள்ளன. ஆனால், அந்த ஆலயங்கள் சமூக சேவையில் ஈடுபடுகின்றமை மிகக்குறைவாகவே உள்ளது. எனவே, எமது மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக ஆலயங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை, ஒவ்வொரு மதங்களிலும் மதகுருமார்கள் மத போதனையில் ஈடுபடுகின்றார்கள். ஆனால், சைவ சமயத்தைப் போதிப்பதற்கு சரியான வழிகாட்டல் இல்லாமல் உள்ளது. இதனால், எமது பாரம்பரியம், கலாசாரம் என்பன தடம்மாறிச் செல்கின்றன. தமிழர்களுடைய கலாசாரம் சைவத்தோடு இணைந்த கலாசாரம். எமது கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். இது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.- என்றார். (ச)

## புதிய இராணுவத் தளபதியாக

# மேஜர் ஜெனரல் பொனிபொஸ் பெரேராவை நியமிக்க வேண்டும் என பிக்குகள் அழுத்தம்!

கொழும்பு, ஜூன் 28

இலங்கையின் புதிய இரா ணுவத் தளபதியின் நியமனம் தொடர்பான அறிவிப்பு ஜனா திபதி செயலகத்தில் இருந்து விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் கூட்டுப் படை களின் தளபதியாகப் பணி யாற்றிய எயர் மார்ஷல் கோலித குணதிலக கடந்த ஜூன் மாதம் 15 ஆம் திகதி ஓய்வு பெற்றார். இதையடுத்து, அந்தப் பதவி வெற்றிடமாக உள்ளது.

இந்தப் பதவிக்கு, தற்போது சேவையில் உள்ள முப்படை களின் தளபதிகளில் மூப்பு நிலையில் உள்ளவரான இரா ணுவத்தளபதி லெப். ஜெனரல்



கிரிசாந்த டி சில்வா நியமிக்கப் படவுள்ளார் என்று கூறப்படு கிறது.

இதுதொடர்பான அறிவிப்பை ஜனாதிபதி விரைவில் வெளி யிடுவார் என்றும் எதிர்பார்க் கப் படுகிறது.

அதேவேளை, இலங்கை இராணுவத் தளபதியாக இரா ணுவத் தலைமை அதிகாரி யாக உள்ள மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க நியமிக் கப்படுவார் என்றும் எதிர்பார்க் கப்படுகிறது. ஜனாதிபதியின் தெரிவாக இவரே இருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

மகளின் பட்டமளிப்பு விழா வில் பங்கேற்பதற்காக சீனா சென்றிருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க நேற்று முன்தினம் நாடு திரும்பி உள் ளார்.

அதேவேளை, அடுத்த இரா ணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் பொனிபொஸ் பெரேராவை நியமிக்க வேண் டும் என்று பௌத்த மதகுரு மார் பலரும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர் என்றும் தகவல் கள் வெளியாகியுள்ளன.

வன்னிப் படைகளின் தலை மையகத் தளபதியாகப் பணி யாற்றிய இவர், புதிய விகாரை கள், சிங்களக் குடியேற்றங் களைநிறுவுவதில் முன்னின்று செயற்பட்டவர்.

இதேவேளை, இவரை இட மாற்றம் செய்தபோது, பௌத்த பிக்குகள் முன்னர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந் தனர் என்பதும் குறிப்பிடத்தக் கது.

# ஜப்பானிய பொலிஸார் மீது இலங்கையர்கள் தாக்குதல்!

### இலங்கைத் திருவிழாவில் சம்பவம்




கொழும்பு, ஜூன் 28

ஜப்பான் தலைநகர் ரோக்கி யோவில் இலங்கைத் தூதரகத் தால் ஏற்பாடு செய்யப்பட் டிருந்த நிகழ்வு ஒன்றில் ஜப் பானிய பொலிஸார் சிலர் தாக் கப்பட்டுள்ளனர் எனத் தகவல் கள் வெளியாகியுள்ளன.

வாரஇறுதியில் இலங்கைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், யொயோகி பூங்காவில் இலங் கைத் திருவிழா ஒழுங்கு செய் யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்விலேயே ஜப் பானிய பொலிஸார் சிலர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இலங்கையர்கள் சிலரே இந்தத் தாக்குதலை நடத்தி னர் எனக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஜப்பானிய பொலிஸார் விசா ரணைகளை ஆரம்பித்துள்ள னர்.

மோதலில் ஈடுபட்டவர்கள் மது போதையில் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பா கக் கொழும்பிலுள்ள ஜப்பானி யத் தூதரகத்திடம் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று கேள்வி எழுப்பியிருந்த போதி லும் அதற்கான பதில் அளிக் கப்படவில்லை.

எனினும், இந்தச் சம்பவம் தொடர்பாக, ஜப்பானிய வெளி விவகார அமைச்சு, இலங்கை தூதரகத்திடம் பிரச்சினை எழுப்பும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# கல்வி, ஆற்றல் கொண்டவர்களுக்கே இராஜதந்திர சேவையில் நியமனங்கள்!

### வெளிவிவகார அமைச்சர் ரவி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 28

இராஜதந்திர சேவையில் கல்வி அறிவு மற்றும் ஆற்றல் கொண்டவர்களுக்கே நிய மனங்கள் வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள் ளார்.

வெளிவிவகார அமைச்ச ராகப் பதவியேற்ற பின்னர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் முதல் முறையாக மல்வத்தை பீடத்தின் மகா நாயக்கர் திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசி பெற் றுள்ளார்.

இதன் போதே அவர் இராஜ தந்திர சேவையில் கல்விப் புலமை மற்றும் ஆற்றல் கொண்டவர்களுக்கே நியம னங்கள் வழங்கப்படும் என்று



மகாநாயக்க தேரரிடம் உறுதி யளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

ஓய்வு பெற்றவர்கள் இரா ஜதந்திர சேவையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

இலங்கையின் தூதுவர்கள் வெளிநாடுகளில் நாட்டின் பெயரைக் கட்டியெழுப்ப வேண்டும். வெளிநாடுகளில் நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள், அதற்கு ஏற்ற வர்களாக இருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் இலங்கை இராஜதந்திரிகளாக 60 பேருக்கு மேல் உள்ளனர். அவர்களில் பலர் தகுதியற் றவர்கள். அவர்கள் திருப்பி அழைக்கப்படுவார்கள்.

முன்னர் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர, தனது பதவிக் காலத் தில், நாட்டுக்காக மிக முக்கி யமான பங்கை ஆற்றியிருக் கிறார்.- என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேரின் சடலங்கள் மீட்பு!

மாத்தறையில் இரண்டு பெண் சிறார்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரின் சடலங் கள் மீட்கப்பட்டுள்ளன.

மாத்தறை - கம்புருபிட் டிய - பெரளிஹதுர பகு தியில் தந்தை, இரண்டு பெண் பிள்ளைகள் மற் றும் ஓர் ஆண் பிள்ளை உட்பட நால்வரின் சட லங்கள் மீட்கப்பட்டுள் ளன.

44 வயது தந்தையும், அவரது 10 மற்றும் 16 வயது பெண் பிள்ளை களும், 14 வயது ஆண் பிள்ளையுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட் டுள்ளனர்.

சடலங்களாக மீட்கப் பட்ட சிறார்களின் தாய் கடந்த ஒன்றரை மாதங் களுக்குமுன்னரேவீட்டை விட்டு வெளியேறியுள் ளார் எனப் பிரதேசவாசி கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், குடும் பத் தகரறொன்றின் கார ணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என ஆரம்பக்கட்ட விசாரணை களில் கண்டறியப் பட்டுள்ளது.

# சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் ஜனாதிபதி திங்களன்று பேச்சு!



கொழும்பு, ஜூன் 28

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடை யில் பேச்சு நடத்தப்பட்டுள் ளது.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன் தினம் இந்த பேச்சு இடம் பெற்றுள்ளது.

உத்தேச அரமைப்பு எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டும் என் பது குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்ன தாகவும் அரமைப்பு திருத்தங் கள் குறித்து பேச்சு நடத்தப் பட்டிருந்தது.

அந்த சந்திப்பில் தீர்மானம் எடுக்கப்படாத காரணத்தால் மீளவும் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

அரசமைப்பு தொடர்பில் சுதந்திரக் கட்சியால் முன் வைக்கப்பட வேண்டிய பரிந் துரைகள் என்ன என்பது குறித்து மிக விரிவாக பேச்சு நடத்தும் நோக்கில் எதிர்வரும் நாள்களில் மீளவும் அனைத்து சுதந்திரக் கட்சியின் உறுப்பி னர்களும் அழைக்கப் பட உள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் அங் கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி யின் உறுப்பினர்களும் பேச் சுக்காக அழைக்கப்பட உள்ள னர்.

# ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டா

கொழும்பு, ஜூன் 28

ரயில் கட்டண அதிகரிப்பு பற்றிய வதந்திகளை ரயில்வே பொது முகாமையாளர் டீ. டப்ளியு. பி. ஆரியரட்ண நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தொவித்தவை வருமாறு:-

ரயில்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. நாளொன்றில் குறைந்த பட்சம் நான்கு லட்சம் பேர் ரயில்சேவையைப் பயன்படுத்துகிறார்கள். இதற்குக்குறைந்த கட்டணமும் ஒரு காரணம்.

விரைவில் இந்தியாவிலிருந்து பவர் செட்டுக்களை தருவித்து மலைநாட்டுக்கான சேவைகளிலும் ஈடுபடுத்தப் படும்.

பல வருடங்களாக கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. ரயில் பொதிகளுக்கான கட்டணத்தை திருத்துவது பற்றி தீர்மானிக் கப்பட்டுள்ளது. --என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 28.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 14 ஆம் நாள் பஞ்சமித் திதி மாலை 6.33 மணி வரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம். மகம் இரவு 7.17 மணி வரை. பின்னர் பூரம். சித்தயோகம் மாலை 6.33 மணி வரை. அதன்மேல் மரணயோகம் இரவு 7.17 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம் பகல் 12.13 மணி முதல் 1.14 மணி வரை. சுபநேரம்: மாலை 4.27 மணி முதல் 5.57 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. ஆனிமாத வளர்பிறை பஞ்சமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: மகம். இன்று மாணிக்கவாசகர் குரு பூசைத் தினம்.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். எண்ணிய கருமங்கள் கைகூடும். இல்வாழ்க்கை சிறப்புற அமையும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் மேன்மை உண்டாகும்.

**ரிஷபம்** : யோசனையான நாள். தொழில் புரியும் இடங்களில் பிரச்சினைகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சினைகள் உண்டாகும்.

**மிதுனம்**:சமபலன்கள் காணப்படுகின்றன. வங்கிகள் நிதி உதவிகளில்தடை ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களின் அவ நம்பிக்கையின்மையும். ஒத்துழைப்பின்மையும் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

**கடகம்** :மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். பெரியோர் உதவிகள் கிடைக்கும். பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். வீடு, வாகன வசதிகள் பெருகும்.

**சிம்மம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணம் பல வழிகளாலும் வந்துசேரும். உத்தியோகம் செய்யும் பெண்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளும், முதலாளிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

**கன்னி**: கவலையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் பிணக்குகள், வாக்குவிரோதங்கள் உண்டாகும். வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் லாபம் குறையும்.

**துலாம்** : மகிழ்ச்சியான நாள். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். நீண்டகாலம் காணாமல் இருந்த சகோதரியைக் கண்டு மகிழ்வார்கள். பிரிந்திருந்த குடும்பத்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**விருச்சிகம்**:மத்திய பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரத்தில் மந்த நிலை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு, வேலைப்பொறுப்பு அதிகரிப்பால் மன அமைதியின்மை ஏற்படும்.

**தனுசு** : ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு அதிகரிக்கும். குடும்ப நல்லுறவு விருத்தியடையும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவுகள் கிடைக்கும்.

**மகரம்** : அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் கொடுத்த பணத்தை மீளப்பெறுவதற்கு அலைந்து திரிவார்கள்.

**கும்பம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு ஓரளவு கிடைக்கும். வியாபாரத்தில் மத்திம முன்னேற்றம் காணப்படும்.

**மீனம்** : புகழ் மிக்க நாள். வருமானம் தேவைக்கு போதுமானதாக இருக்கும். பெண்கள் சுயதொழிலில் முன்னேற்றம் அடைவார்கள்.

**சந்திராட்டமநாள்: உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 1, 2 ஆகிய நட்சத்திரங்களில் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

இயற்கை அனர்த்தங்களுக்கு காரணமான

# குரோதத்தன அரசியலை வெறுத்து நாளை சத்தியாக்கிரகப் போராட்டம்

### பெங்கமுவே நாலக்க தேரர் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 28

வெறுப்பு மற்றும் குரோதத்தனமான அரசியல் நடத்தை காரணமாகவே இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான இயற்கை அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கக்கோரி நாடளாவிய ரீதியில் விளக்கு ஏற்றி சத்தியாக்கிரகம் ஒன்றை நாளை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் தலைவர்களில் ஒருவரான பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆட்சியாளர்கள் துஷ்டர்களாக மாறுவதனாலேயே இயற்கை சினமடைந்து சேதங்களை ஏற்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் எவ்வளவு அனர்த்தங்கள் ஏற்பட்டன என்பது தொடர்பில் நாம் எல்லோரும் அறிவோம். ஒருபுறம் வெள்ளம், மறுபுறம் குப்பை மேட்டுச் சரிவும், மண்சரிவுகளும் ஏற்பட்டு இயற்கை அனர்த்தங்கள் நிகழ்கின்றன. இவை வெறுமனே ஏற்படா. ஆட்சியாளர்கள் துஷ்டர்களாகும்போது இயக்கை சினமடைந்து அனர்த்தங்களை ஏற் படுத்தும் என்று புத்தபெருமானின் போதனை கூறுகின்றது. இதுதான் இன்று நடக்கிறது. அதனால் குரோதம் மற்றும் வெறுப்பு ரீதியான அரசியல் நடத்தைகள் அகன்றுபோக வேண்டும் என்று கோரி சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தவுள்ளோம். இயற்கை அனர்த்தத்தைப் போன்று மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தமும் மிகவும் பயங்கரமானது. எனவே இவைபோன்ற பயங்கரங்களும் அகன்றுபோக வேண்டும் என்று கோரி சத்தியாக்கிரகம் செய்யவுள்ளோம். இந்த சத்தியாக்கிரகம் 90 வீதமல்ல, நூற்றுக்கு நூறு வீதமும் சாத்தியமாகும். கொழும்பு கோட்டை சம்புத்தாலோக்க விகாரையில் நாளை மாலை 5.28 அளவில் இந்த சத்தியாக் கிரகம் நடத்தப்படவுள்ளது. - என்றார். (எ)

# இலங்கையிலிருந்து நாடு திரும்புவதற்கு உதவி கோரும் ஸ்கொட்லாந்துப் பெண்



கொழும்பு, ஜூன்28

தமதுகணவனை இழந்த ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர், இலங்கையில் இருந்து மீண்டும் நாடு திரும்புவதற்கு உதவியைக் கோரி உள்ளார் என்று ஸ்கொட்லாந்தின் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

டயான் டி செய்சா என்ற எடின்பேர்க் பகுதியைச் சேர்ந்த அந்த பெண் ஆறு வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு சுற்றுலாப் பயணியாக வந்துள்ளார்.

அப்போது அவர் தங்கி இருந்து விடுதியில் பணியாற்றி வந்த பிரியஞ்சன டி சொய்சா என்பவரை காதலித்து, திருமணம் செய்து கொண்டார்.

கடந்த ஆண்டு எடின் பேர்கில் உள்ள தமது வீட்டை விற்று, இலங்கையில் தமது கணவருடன் வசித்து வந்த போது, அவரது கணவர் கடந்த மே மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அநாதரவாகியுள்ள அவர், மீண்டும் தமது நாட்டுக்கு செல்வதற் கான முயற்சிகளை எடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது. (எ)

# விலையுயர்ந்த கடல்மீன்களின் இனப்பெருக்க மத்திய நிலையம்

### மட்டக்களப்பில் இன்று திறந்து வைப்பு

விலையுயர்ந்த 3 வகையான கடல் மீன்களை இனப் பெருக்கம் செய்வதற்கான கண்காணிப்பு மத்திய நிலையம் ஒன்று மீன்பிடி மற்றும் கடல்வள அபிவிருத்தி அமைச்சால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட உள்ளது.

மட்டக்களப்பு தர்மபுரம் பிரதேசத்தில் ஒரு கோடி 50 லட்சம் ரூபா செலவில் அந்தக் கண்காணிப்பு மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

முதில்லா, கொஸ்ஸா மற்றும் வவ்வாலயா உள்ளிட்ட விசேட மீனினங்கள் தொடர்பான கண்காணிப்பு மத்திய நிலையத்தின் ஊடாக இனம் பெருக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த மத்திய நிலையத்தின் ஊடாக ஒரு வருடத்தில் 20 லட்சம் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மீன்பிடி மற்றும் கடல்வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அந்த மீனினங்களை தெரிவு செய் யப்பட்ட மீனவர்களுக்கு வழங்கி ஏற்றுமதிக்கு ஏற்றவகையில் தயார் படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், வருடாந்தம் 100 கோடி ரூபாவை வருமானமாக ஈட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அனைத்துப் பல்கலைக்கழகங்களும் உடனடியாக தரப்படுத்தப்பட வேண்டும்

### ஜெயவர்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அமிலதேரர் கருத்து

கொழும்பு, ஜூன் 28

அனைத்து பல்கலைக் கழகங்களையும் தரப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட வேண்டும். அரச பல்கலைக்கழகங்கள் தரமுயர்த்தப் பட வேண்டும். 15 தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக் கப்பட வேண்டும் என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

15 தனியார் பல்கலைக் கழகங்கள் உடனடியாக ஆரம்பிக்கத் தேவையான உட்கட்டுமான வசதிகளை அரசு வழங்க வேண்டும்.

தனியார் பல்கலைக் கழகங்கள் இருக்க வேண்டியது அவசியம். போக்குவரத்துச் சபை பஸ்களைப் போன்றே தனியார் பஸ்களும் இயங்குகின்றன.

தனியார் மருத்துவமனைகள் காணப்படுகின்றன அதே போன்று அரச மருத்துவமனைகளும் காணப்படுகின்றன.

அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளும் காணப்படுகின்றன.

மேலும், தேசிய பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார கொள்கை போன்ற முக்கிய விடயங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களிலும் தனியார்துறையின் பங்களிப்பு இருக்க வேண்டும். - என்றார். (எ)

காலைக்கதிர்
Kalaikkathir





இன்று குருபூசை தினம்

# அற்புதங்கள் பல புரிந்து சைவ சமயத்தை மேன்மையுறச் செய்தவர் மாணிக்கவாசகர்

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட சைவ சமய குரவர்கள் நால்வருள் மாணிக்கவாசகரும் ஒருவராவார். மாணிக்கவாசகர் பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூரில் சம்புபாதாசிரியார்க்கும் - சிவஞானவதியாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் திருவாதவூரர். திருவாதவூரில் அவதரித்தபடியால் திருவாதவூரர் என்னும் பெயரைப் பெற்றார். பாண்டிய நாட்டு மன்னனான அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரரைத் தனது முதல் மந்திரியாக்கியதோடு '' தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தையும் சூட்டி பல விருதுகளையும் வழங்கினான்.

அரசரின் பணிப்பின்படி குதிரைகள் வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் பரமாச்சாரியராக இருந்த இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுத் தன்னை மறந்து கொண்டு சென்ற பொன் பொருள்கள் எல்லாவற்றையும் செலவழித்தார். தம்மைச் சீடராக ஏற்றுக் கொள்ளும்படி குருவை வேண்டிக் கொண்டார் குருவும் அவருக்கு தீட்சை அளித்து அருள்புரிந்தார்.

இந்த நிலையிலே இறைவன் அருளால் '' நரிகளைப் பரிகளாக்கிய'' அற்புதம் நடந்தது. மாணிக்கவாசகரின் பெருமையை மன்னன் உணரும்படி செய்தார் இறைவன்.

அமைச்சர் பதவியைத் துறந்த மாணிக்கவாசகர், ப ல தலங்களையும் தரிசித்துக் கொண்டு சிதம்பரத்தைச் சென்றடைந்தார். அங்கு இவரது திருவாசகப் பாடல்களைக் கேட்டு இன்புற்ற இறைவன் இவருக்கு மாணிக்கவாசகர் என்னும் நாமத்தைச் சூட்டினார். ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்.'' தில்லையிலே ஊமைப் பெண்ணைப் பேச வைத்த மாணிக்கவாசகர் பௌத்தர்களை வாதில் வென்று சைவசமயத்தின் மேன்மையை நிலைநாட்டினார்.

அத்தணர் வடிவில் வந்த தில்லைச் சிற்றம்பலவன் மாணிக்கவாசகர் திருவாசகத்தைப் பாடத்தாமே எழுதிக் கொண்டார்: மறுநாள் கோயில் படியில் ஏட்டுப் பிரதியொன்றை அந்தணர்கள் கண்டெடுத்தனர். அதில் '' வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது'' என்று எழுதப்பட்ட அடிக் குறிப்புக் காணப்பட்டது. மாணிக்கவாசகரின் அருமை,பெருமைகளை உணர்ந்த ''தில்லை வாழ் அந்தணர்கள்'' ''நீர் பாடிய பாடல்களுக்கு பொருள் யாது ?'' என்று அவரைக் கேட்டனர். அவர்களை தில்லைக் கோயிலுக்கு அழைத்துச் சென்ற மாணிக்கவாசகர், அம்பலத்தரசனைச் சுட்டிக்காட்டி இவரே இதன் பொருள் எனக் கூறிவிட்டுச் சிவசாயுச்சியம் அடைந்தார். மாணிக்கவாசகர் திருவாசகம், திருக்கோவையார் என்பவற்றைப் பாடியுள்ளார். இவை எட்டாந் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம் ஆனி மாதத்தில் வரும் மகா நட்சத்திரமாகும். சைவ சமயத்தை அழியாது பேணிப் பாதுகாத்த மாணிக்கவாசகரின் குருபூசைத் தினத்தை இன்று கொண்டாடுவது சைவ சமய மக்களின் தலையாய கடமை மட்டுமன்றி அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி இனிவருங்காலத்தில் சைவசமயம் மேன்மையுற முழுப்பங்களிப்பையும் வழங்குவதே சைவ சமய மக்களாகிய நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும்.

''மேன்மைகோள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

திருமதி மலர்விழி கனகசபை
உதவிக் கல்விப்பணிப்பாளர் (அழகியல்)
தீவக கல்வி வலயம்.

# மாவை ஸ்ரீ கந்தசுவாமி கோவில் காம்போற்சவப் பெருவிழா

## நாளை பக்திபூர்வமாக ஆரம்பம்



சரித்திரப் பிரசித்தி பெற்ற அருள்மிகு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் காம்யோற்சவப் பெருவிழா நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

திருவிழா உற்சவங்கள் 25 நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை திருக்கார்த்திகையும், 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறு நாள் ஞாயிறு ஆடி அமாவாசை நாளில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

முருகப் பெருமான் தீர்த்தமாட அன்றையதினம் காலை 5.30 மணிக்குக் கீரிமலை புறப்படுவார். 6.30 மணிக்கு கண்டகித் தீர்த்தம்.

மாலை 6 மணிக்கு கீரிமலையில் இருந்து சுவாமி புறப்படுவார். இரவு 8.30 மணிக்கு சாயரட்சை பூசை. இரவு 9.30 மணிக்கு இரண்டாம் கால பூசை, தொடர்ந்து அர்த்த ஜாம பூசை இடம்பெறும்.



ஏழாம் நூற்றாண்டில், தென்னகத்து இளவரசி மாருதப்புரவீகவல்லி தனது குன்ம நோயையும் குதிரைமுகத்தையும் நீக்கக் கீரிமலைப் புண்ணிய தீர்த்தத்திலே நீராடி, மாவிட்டபுரத்தில் கோவில் கொண்டருளியிருக்கும் முருகப் பெருமானை வழிபட்டுத் தனது குன்ம நோயையும், தனக்கேற்பட்ட பெருங்குறையையும் நீக்கிய திருத்தலமே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாகும். ஆதலால் இவ்விடத்திற்கு: துரகானன விமோசனபுரி என்ற பெயர் ஏற்பட்டது.

இதுவே தமிழில் மா விட்டபுரம் ஆகும். இவ்வாலயம் சிறந்த முறையிற் கட்டப்பட்டு இதற்கான விக்கிரகங்கள் சிதம்பரத்திலே தில்லைமூவாயிரவருள் ஒருவரான பெரிய மனத்துள்ளார் அவர்களால் இலங்கைக்கு வருவிக்கப்பட்டது. காங்கேயன் விக்கிரகம் வந்திறங்கியமையால் காங்கேசன்துறை என்ற காரணப் பெயரும் துறைமுகத்திற்கு ஏற்படலாயிற்று. விக்கிரகங்கள் உரிய முறையிலே பிரதிஷ்டை செய்யப்பட்டு கி.பி 1795 ஆம் ஆண்டு ஆனி உத்தர நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெற்றது. இத் தீக்ஷிதர் பரம்பரையினரே இன்றும் இவ்வாலயத்தின் சகல கருமங்களையும் செய்து வருகின்றனர்.

மாவிட்டபுரம், கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத்தை இறுதியாகக் கொண்டு லஷ்சார்ச்சனை நடைபெறுகின்றது. காலையில் நடைபெறும் அர்ச்சனையின் போது கல்லூரி மாணவர்கள் திருப்புகழ் அஞ்சலி செய்கின்றனர். மாலையில் அர்ச்சனையின் போது நாதாஞ்சலி இடம்பெறுகின்றது. இறுதிநாள் அன்று சகஷ்ர சங்காபிஷேகமும், ஷண்முகர் நடனமும் இடம்பெற்று, தேவியருடன் ஸ்ரீஷண்முகர் தேர் மீதமர்ந்து பவனி வருவார்.

மஹோற்சவம் ஆடி அமாவாசையை அந்தமாகக் கொண்டு 25 தினங்கள் இடம்பெறுகின்றது. இதிலே 5 ஆம் திருவிழா ஸ்ரீஷண்முகர் நடனமும், சப்பரத் திருவிழாவிலே பிரமாண்டமான சப்பறமும் தேர்த்திருவிழாவிலே 5 தேர்களில் சுவாமி வீதி வலம் வருதலும்கண்கொள்ளாக்காட்சியாக அமைவது குறிப்பிடக் கூடிய தொன்று கந்தசஷ்டி யாகத்துடன் கூடியது. சூரன் போர் புரியுங்காட்சி மிகச் சிறப்பானது. இங்கு நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

சுக்கிர வார உற்சவம், மாத உற்சவம் ஆகியனவும் உண்டு. கொடித் தம்பம் வெள்ளியினாலானது. கந்தபுராணத்திற் கூறப்படும் இந்திர மயில் இங்கு வாகனமாக உள்ளது. தலவிருட்சம் காஞ்சிமா ஆகும். ஆலயத்தின் மேற்குக் கோபுர வாசலில் புராதன ராஜ கோபுரம் வானளாவி நிற்கின்றது. இங்கு மூன்று வீதிகள் உள. புராண படனம் ஆண்டுதோறும் சிறப்பாக இடம்பெற்று வருகிறது.




பொன்.வேணு கிருஷ்ணா

**வடகொரியா அணுஆயுத ஒழிப்பை மேற்கொள்ளல்**

ஆஸ்திரேலிய அமைச்சர்களுடன் ஒரு கூட்டு பத்திரிகையாளர் மாநாட்டில் ரில்லர்சன் பேசுகையில், வட கொரியா அணுஆயுத ஒழிப்பை மேற்கொள்ள கோரிக்கை விடுப்பதிலும், தென் சீனக் கடல் பகுதியில் சீனாவின் செயற்கைத் தீவு கட்டுமானம் மற்றும் அவர்களின் இராணுவமயமாக்கல் அம்சங்கள் ஆகியவற்றை எதிர்ப்பதிலும் அமெரிக்காவும், ஆஸ்திரேலியாவும் சேர்ந்து ''ஒரே குரல் கொடுக்கின்றனர்'' என்பதை வலியுறுத்தினார்.

சீனாவின் வளர்ந்துவரும் பொருளாதார செல்வாக்கைப் பற்றி குறிப்பிடுகையில், ''தென் சீனக் கடல் பகுதி தீவுகளில் அதன் இராணுவமயமாக்கம் அல்லது வடகொரியா மீது சரியான அழுத்தம் கொடுக்கத் தவறுவது போன்ற ஏனைய சிக்கல்களை தவிர்த்துவிட்டு, சீனா தனது பொருளாதார வல்லமையை அங்கு பயன்படுத்திக்கொள்ள நாங்கள் அனுமதிக்க முடியாது'' என்று தேசிய பாதுகாப்பு செயலர் அறிவித்தார்.

இந்தக் கருத்துக்கள் சீனாவின் மீதான வெறும் எச்சரிக்கையாக மட்டுமல்லாமல், வாஷிங்டனிலிருந்து விலகி, பெய்ஜிங்கை நோக்கி தனது பொருளாதார உறவுகளை ஊக்குவிப்பதற்கான ஒரு முயற்சியில் ஈடுபட்டுள்ள பிலிப்பைன்ஸ் போன்ற ஆசிய நாடுகள் மீதான எச்சரிக்கையாகவும் அவை இருந்தன. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டுரேற்ற தனது முன்னோடிகளின் ஆக்ரோஷமான சீன எதிர்ப்பு நிலைப்பாட்டை மாற்றியுள்ளதுடன், தென் சீனக் கடல் பகுதிகளில் சீனாவுடனான தனது நாட்டின் பிராந்திய மோதல்களையும் குறைத்துக்கொண்டுள்ளார்.

ஒரு கூட்டு AUSMIN அறிக்கை தென் சீனக் கடலில், ''சட்டபூர்வமான, சுதந்திரத்துடன் கூடிய கடல்வழி போக்குவரத்தை அடைவதன் முக்கியத்துவம் பற்றியும்,'' ''விதிகள் அடிப்படையிலான உத்தரவை பின்பற்றுவது பற்றியும் வலியுறுத்தியது. கடந்த வார இறுதியில், சிங்கப்பூரில் ஆசியாவின் முன்னணி வருடாந்திர பாதுகாப்பு மாநாடான Shangri La Dialogue நடைபெறுவதற்கு முன்னதாக, ட்ரம்ப் நிர்வாகத்தின் முதல் ''கடல்வழி போக்குவரத்து சுதந்திர'' நடவடிக்கை ஒன்றை அமெரிக்க கடற்படை நடத்தியதுடன், ஒரு தீவுப் பகுதி சுற்றிலும் சீனா உரிமைகோரும் பகுதியில் 12 கடல்வழி-




மைல் வரம்பிற்குள் செயற்படும் வகையில் வழிகாட்டி ஏவுகணையுடன் கூடிய அழிப்புக் கப்பல் ஒன்றையும் அங்கு அனுப்பியது.

தென் சீனக் கடல் பகுதியில் உள்ள பிராந்திய மோதல்களுக்கு தீர்வு காண்பதற்கு, ஹேக்கில் உள்ள நிரந்தர மத்தியஸ்த நீதிமன்றத்தின் கடந்த வருட தீர்ப்பு ஆதாரமாக மாறியதாக AUSMIN அறிக்கையும் ஆத்திரமூட்டும் வகையில் முன்மொழிந்தது. பிலிப்பைன்ஸால் கொண்டுவரப்பட்டு பலமான அமெரிக்க ஆதரவுபெற்ற இந்த வழக்கையும், இந்த நீதிமன்றத்தின் அதிகார எல்லையையும், தீர்ப்பையும் சீனா அங்கீகரிக்கவில்லை.

**வட கொரிய பிரச்சினைக்கு சீனா தீர்வு காணவில்லை என்றால் இராணுவ வழிமுறை ஊடான தாக்கத்துடன் அதனை அமெரிக்கா நிறைவேற்றுமென ட்ரம்ப் அறிவித்தார்**

வட கொரியா தனது அணு ஆயுதங்களை இல்லாதொழிக்க அழுத்தம் கொடுக்க ட்ரம்ப் நிர்வாகம் ஏற்கனவே சீனாவிற்கு மிகுந்த அழுத்தம் கொடுத்து




வந்துள்ளது, எனினும் சீன முயற்சிகள் குறித்தும், சமீபகாலம் வரை ஏனைய அபாயகரமான வெடிப்புப் புள்ளிகள் இன்னும் மோசமான நிலையை அடைவதிலிருந்து தவிர்த்து வந்துள்ளது குறித்தும், அதனை புகழ்ந்து பாராட்டியுள்ளது. தென் சீனக் கடலில் சீனாவின் நடவடிக்கைகளை ரில்லர்சனின் கருத்துக்கள் எதிரொலிப்பதுடன், ''வட கொரியா மீது சரியான அழுத்தம் கொடுக்க'' அது தவறிவிட்டதானது, பெய்ஜிங் ஒருகடும் அணுகுமுறையை செயல்படுத்துவதற்கான நேரத்தையும் கடந்துபோகச் செய்துவிட்டது என்பதை சுட்டிக்காட்டுவதாக மறைமுகமாக குறிப்பிடுகின்றது. வட கொரிய பிரச்சனைக்கு சீனா ''தீர்வு'' காணவில்லை என்றால் இராணுவ வழிமுறை ஊடான தாக்கத்துடன் அதனை அமெரிக்கா நிறைவேற்றுமென ட்ரம்ப் அறிவித்தார்.

ஐரோப்பாவில் அமெரிக்க நட்பு நாடுகளுடன், குறிப்பாக ஜேர்மனியுடன் பிளவுகளை எதிர்கொள்கையில், ட்ரம்ப் அதிகாரிகள்சிட்னிபேச்சுவார்த்தைகளின் போது சீனாவிற்கு ஒரு கடுமையான செய்தியை பகிரங்கமாக விடுக்க தேர்ந்தெடுத்தது முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. நமது உலக கண்ணோட்டத்தில் நாம் ஒரேமாதிரி சிந்தனை கொண்டவர்களாக இருக்கிறோம் மேலும், ''ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா இடையிலான இருதரப்பு உறவுகளின் வலிமையை AUSMIN ஒருமுறை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது'' என்ற வகையில் வலியுறுத்துவதன் மூலமாக அவர்களது ஆஸ்திரேலிய சமதரப்பினரான ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பிஷப், வொஷிங்டனின் செய்தியையே எதிரொலிக்கச் செய்தார்.

''ஒரு நிர்ப்பந்தமான நிலைக்குட்பட்டுள்ள சீனா அதன் அண்டை நாட்டினர் தங்களது சுயாதீன மற்றும் மூலோபாய இடைவெளியை அவர்களுக்கு வழங்கக்கோரும் ஆத்திரமூட்டும்வகையிலான கோரிக்கையை முன்வைப்பதை கண்டறிய வேண்டும் என்று ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மால்கம் டர்ன்பல் Shangri La Dialogue இன் போது அவராற்றிய முக்கிய உரையில் எச்சரிப்பதுடன், ''வட கொரியாவின் சட்டவிரோத, பொறுப்பற்ற மற்றும் ஆபத்தான நடத்தையைக் கட்டுப்படுத்த'' அதன் ''பெரும் செல்வாக்கை பயன்படுத்துவதற்கும்'' பெய்ஜிங்கை வலியுறுத்துகிறார். மேலும், அமெரிக்காவினால் நிறுவப்பட்ட ''சர்வதேச விதிகள் அடிப்படையிலான ஆணையினை சீனா ஒத்துக்கொள்ளவும், ஆசியாவில் பிராந்திய மேலாதிக்கத்தை ஸ்தாபிக்க முனையவேண்டாம் என்றும், டர்ன்பல் மற்றும் அமெரிக்க பாதுகாப்புச் செயலர் மாட்டிஸ் இருவரும் வலியுறுத்தினர்.

ஆஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்த செனட் இராணுவ சேவை குழுவின் தலைவரான அமெரிக்க செனட்டர் ஜோன் மெக்கெய்ன், டர்ன்பலின் கருத்துக்களை பின்பற்றி, ட்ரம்பை பகிரங்கமாக விமர்சித்தார், ஆனால் ஆஸ்திரேலியா போன்ற அமெரிக்க நட்பு நாடுகள் அமெரிக்காவுடன் நிற்கவேண்டும் என்றும், மாட்டிஸ் மற்றும் ரில்லசர்சன் போன்ற அதிகாரிகளுடன் நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அண்மைய இரவு விருந்து ஒன்றின் போது, ட்ரம்ப் அதிகாரிகள் இருவரை டர்ன்பல் தனியாக சந்தித்தார்.

**பாரிஸ் காலநிலை ஒப்பந்தம் மற்றும் பசிபிக் இடையிலான கூட்டு உடன்படிக்கை (Trans Pacific Partnership-TPP) போன்ற ஒப்பந்தங்களை ஒதுக்கித்தள்ள முனையும் ட்ரம்பின் முடிவு ஒத்துழைப்பை குறைக்குமா?**

பத்திரிகையாளர் மாநாட்டில், ட்ரம்பின் ''முதலில் அமெரிக்கா'' கொள்கைகள் அப்பிராந்தியத்தில் ஆசியாவிலிருந்து அல்லது அமெரிக்க நட்பு நாடுகளிலிருந்து அமெரிக்கா பின்வாங்குவதை சுட்டிக்காட்டவில்லை என்பதை அழுத்திக் கூறுவதில் ரில்லர்சனும், மாட்டிஸும் சிரமப்பட்டனர். பாரிஸ் காலநிலை ஒப்பந்தம் மற்றும் பசிபிக் இடையிலான கூட்டு உடன்படிக்கை (Trans Pacific Partnership-TPP) போன்ற ஒப்பந்தங்களை ''ஒதுக்கித் தள்ள'' முனையும் ட்ரம்பின் முடிவு ஒத்துழைப்பை குறைக்குமா என்று கேட்கப்பட்டபோது, ஆஸ்திரேலியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே உள்ள ''பகிர்ந்துகொள்ளும்'' நலன்கள் மற்றும் ஏனைய பல பகுதிகளிலுள்ள இத்தகைய வலுவான பரஸ்பர நலன்களையும், ஒத்துழைப்பையும் ரில்லர்சன் வலியுறுத்தினார்.

வெளியுறவு அமைச்சர் பிஷப் வேறுபாடுகளை குறைத்துக்காட்ட முனைந்தார். ஆஸ்திரேலியா எப்போதுமே அதன் தேசிய நலன்களையே கணக்கில் எடுத்துக் கொண்ட நிலையில், அவர் பின்வருமாறு கூறினார்: நாங்கள் பகிர்ந்துகொள்ளும் மதிப்புக்களையும், பகிர்ந்துகொள்ளும் நலன்களையும் கொண்டுள்ளோம் மேலும், விதிகள் அடிப்படையிலான உத்தரவை ஆதரிப்பதில் நாங்கள் நிச்சயமாக முற்றுமுழுதாக அமெரிக்காவுடன் இணைந்திருக்கிறோம், என்பதுடன் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஆஸ்திரேலியா ஈடுபடவேண்டும் என்ற நிலை ஏற்படுகின்றபோது, ஆஸ்திரேலியா அதற்கேற்ப செயலாற்றியே ஆகவேண்டுமென நாங்கள் எங்களது சொந்த சிந்தனையை தயார்ப்படுத்தி வைத்துள்ளோம். அது நடக்கும்போது, அமெரிக்காவும், ஆஸ்திரேலியாவும் இதேபோன்ற கருத்துக்களையே பகிர்ந்து கொள்கின்றன.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் பதிவாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்கூறுகளை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

17



## அத்தியாயம் - II

## இந்தியா பற்றிய எனது முதல் மனப்பதிவுகள்

இந்தியாவிலே நான் 1979இல் இருந்து 1987 வரை வாழ்ந்தேன். அந்தக் காலம் முழுவதும் மேற்குலக அமைப்புக்கு நேர்முரணான வேறு ஒரு சமூக கலாசார சூழலிலேயே வாழ்ந்தேன். இரண்டுக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் எண்ணில் அடங்காதவை; சிக்கலானவை. அவற்றின் ஏற்றத்தாழ்வுகளைப் பதிவு செய்ய முனைந்தால் அதுவே ஒரு தனி நூல் ஆகிவிடும். அங்கும் இங்குமாக ஒரு சில மனப்பதிவுகளையே இங்கு குறிப்பிடுகின்றேன். எடுத்த எடுப்பிலேயே பரந்துபட்ட பார்வையின் அடிப்படையில் ஒன்றைக் குறிப்பிடலாம். எனது மேலைத்தேய சமூக மயமாக்கலுக்கும் தமிழ் நாட்டு வாழ்க்கை முறைக்கு இடையே காணப்பட்ட வேறுபாடாக முதலில் சமூக உறவுகளைக் கூறலாம். அந்த உறவுகளின் அடிப்படைகளே முதலில் குறிப்பிடத்தக்கவை. தனி ஆள், தனியான வாழ்க்கை, ஒடுக்கமான சிறிய குடும்பம் போன்ற அடிப்படைகள் மீதே மேற்கத்தேய சமூக வாழ்க்கை கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி, தனித்து ஒதுங்கி வாழ முயல்வது தோல்வியிலேயே முடியும். அப்படியான அபிலாஷை இந்த சமூகங்களில் வாழும் மக்களுக்கு இல்லை. வெளியார் தலையீடு இல்லாமல், இனி முன்னறிவித்தல் கொடுத்துவிட்டே விருந்தினர் வரவேண்டும் என்ற நியதி இல்லாமல் ஒரு வீட்டின் நான்கு சுவர்களுக்குள் ஒதுங்கியிருந்து தனிப்பட்ட வாழ்க்கை நடத்துவது என்பது தெற்கு ஆசியாவில் பெரும்பாலான மக்களால் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. இந்த அடிப்படைச் சிந்தனையை நான் மனதிலே பதித்துக்கொள்ள வேண்டி இருந்தது மட்டுமன்றி யதார்த்த வாழ்க்கையிலும் அதைப் பேண வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்தில் எமது வீட்டுக்கு வந்த பிரித்தானிய செய்தியாளர் ஒருவர் என்னிடம் விடுத்த கேள்வியை என்னால் என்றுமே மறக்க முடியாது. அப்பொழுது 1991 ஆம் ஆண்டளவில் என்று நினைக்கிறேன். ஒரு திறந்த வீட்டில் எந்த நேரமும் மக்களால் சூழப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தோம். அதுவே தான் மிக இயல்பாகவும் இருந்தது. எதைப் பற்றியுமே சிந்திக்க மறந்திருந்தேன். அப்படியான சூழலில் தனிமையின்றி உங்களால் எப்படி ஒரு கூட்டத்துக்குள் வாழ முடிகிறது என அந்த செய்தியாளர் திடீரெனக் கேட்டதும், திகைத்துப் போனேன். வீட்டின் உள்ளும் புறமும் அத்தனை பேரும் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பது அவரை வியக்க வைத்தது. எமது வீடு பரக்கப் பரக்க திறந்திருந்தது. எமக்குத் தெரிந்தவர்கள் எல்லோரும் இரவு பகல் என்றில்லாமல் வருவதும் போவதுமாக இருந்தார்கள். இந்தியாவில் எங்கள் வீடு எப்போதாவது பூட்டியோ யாரும் இல்லாமலோ இருந்ததில்லை. தனி ஒருவரிடம் சமுதாயம் எதிர்பார்க்கும் உறவும் இத்தகைய சமூக ஊடாட்டத்தோடேயே இணைந்து இருந்தது. சொல்லப்போனால், தாய்மை, ஒரு பெண்ணுக்கு குறித்த ஒரு சமுதாயக் கடமையையும் தகைமையையும் கொடுக்கிறது. அந்தக் கடமையை அவர் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார். அது அவருக்கு சமூக உறவுகளையும் அதிகாரத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது. வீட்டில் மூத்த மகன் மீது தனியான பொறுப்பும் தகைமையும் சுமத்தப்படுகின்றன. அதற்கான கட்டுப்பாடுகளும் பொறுப்புகளும் கூட, பளு ஏற்றப்படுகின்றன. அதைப் போலவே ஒவ்வொரு தனி மனிதருக்கும் சமுதாயக் கடமையும் தகைமையும் உண்டு. இவற்றில் இருந்து உறவுகள் துளிர்கின்றன. மக்களிடையே சமூக ஊடாட்டம் தொடர்ந்து நிகழ இது வழி ஏற்படுத்துகிறது. இந்தச் சமூக உறவுகள் பலமுகம் கொண்டவை. நிலைத்து நிற்பவை. தனியாள் தேவைகளுக்கு நேரம் கிடைப்பதே அரிது. ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் ஏதாவது பேசுவதற்கு நேரம் கிடைக்கிறது என்றால், அது பெரும்பாலும் இரவில் ஒரு சில மணிநேரம் தான். இந்தச் சூழலுக்குப் பொதுவான காரணம் கூட்டுக் குடும்ப முறைதான்.



இதுவேதான் இந்திய, இலங்கை சமுதாயங்களில் சமூக உறவுகளின் அடிப்படையாகும்.

தமிழ்ச் சமுதாய வடிவமைப்பில் குடும்பம் என்று வரும்போது கூட்டுக் குடும்ப முறையே முக்கியத்துவம் பெறுவது. பெரும்பாலான வீடுகளில் பெற்றோர், பிள்ளைகள் தவிர யாரோ ஓர் உறவினரும் அவர்களோடு வாழ்வார். வயதான பெற்றோர், குடும்பமாக வளர்ந்து விட்ட பிள்ளைகளோடு வாழ்வதும், தமையன், தமக்கை குடும்பங்களுடன் இளையவர்கள் வசிப்பதும் மிகவும் பொதுவானது. மருமக்கள் கூட வந்து தங்குவார்கள். தமிழ் மக்களிடையே நிலவும் தாய்வழிச் சமுதாய முறைமைகளால், வீடுகளைச் சகோதரிகள் பங்கு போடுவதும் ஆங்காங்கே உண்டு. வீட்டுத் தளத்தில் ஒரு சகோதரி குடும்பமும் மேல்மாடியில் இன்னொரு சகோதரி குடும்பமும் வசிப்பது பொதுவான ஒன்று.

சாப்பாட்டு வேளையும் ஒரு பொது நிகழ்வேதான். சாப்பாட்டுக்கு மற்றவர்கள் அழைக்கப்படுவதும் உண்டு. அப்படியான வேளையில் சிறப்பு ஏற்பாடுகள் நடக்கும். உயிர் வாழ குடிதண்ணீர் அடிப்படையோ உணவும் அப்படியேதான் கருதப்படுகிறது. பகிர்ந்து உண்ணல் நியதி ஆகிறது. ஆகவே இந்தச் சூழலில், தனியொரு தம்பதியர்க்குச் சமைக்கும் எனது வழக்கத்தை நான் மாற்றிச் சமூகச் சமையலாக செய்ய வேண்டியிருந்தது. பொதுவாக தமிழ்ச் சமுதாயத்தில் பெரும்பாலான பெண்கள் வீட்டாருக்குத் தேவையானதைக் காட்டிலும் கூடுதலாகவே சமைப்பார்கள். இதனால், வீட்டுக்கு விருந்தினர் எந்த நேரம் வந்தாலும் அவர்களுக்கு உணவு பரிமாறக் கூடியதாக இருக்கும். எந்தவேளை எவர் வந்தாலும் சாப்பிட அழைப்பதும் விருந்து பகிர்வதும் தமிழ் மக்களின் விருந்தோம்பலில் முக்கிய அம்சமாகும். இந்தச் சமூக கலாசார வழக்கத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு, பொதுவாக பெண்களுடையதே. இனி, பெண்கள் அண்டை வீட்டுப் பெண்களுடன் உணவு பகிரும் வழக்கமும் உண்டு. ஒரு பெண், தான் சமைத்த உணவில் சிறு பகுதியையேனும் சுவைத்துப் பார்ப்பதற்காக ஒரு நண்பருக்கோ அண்டை வீட்டுக்கோ அனுப்பாது ஒரு நாளேனும் கழியாது எனலாம். தாம் சமைக்கும் உணவில் ஏதோ ஒன்று எமக்குப் பிடிக்கும் என்று அந்தப் பெண்ணுக்குத் தெரிந்தால், அந்த உணவில் சிறிதேனும் ஏதாவது ஒரு சாப்பாட்டு வேளைக்கு எமக்கு வந்து சேர்ந்து விடும். கிராமப் பகுதிகளில் ஒரே குடும்பத்தில் உள்ள பெண்களிடையேயும், இனி அண்டை வீட்டுப் பெண்களுடனும் சமூக உறவு நெருக்கமாக இருக்கும். தாம் எங்காவது வெளியே செல்லும்போது, தமக்காக உணவு சமைக்குமாறு சிநேகிதியையோ உறவினரையோ அண்டை வீட்டாரையோ கேட்பதற்கு பெண்கள் தம்மிடையே தயங்குவதில்லை. எதிர்பாரா விருந்தினர் வந்து சேர்ந்து தம்மிடம் போதுமான உணவு இல்லா விட்டால், அண்டை வீட்டு அல்லது நண்பர்களின் சமையல் அறைக்குச் சென்று அங்கு இருப்பதை உரிமையோடு பெறவும் பெண்கள் தயங்குவதில்லை.

மேற்குலக வாழ்க்கை முறையோடு இந்தியாவை ஒப்புநோக்குகையில் இன்னொரு முக்கியமான வேறுபாட்டைக் கண்டுகொள்ளலாம். இந்தியாவில், தனி ஆளின் நடத்தை மீது செல்வாக்கையும் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கும் பலம் பொருந்திய சமூக அழுத்த சக்தியாக விளங்குவது குடும்பமும் சமுதாயமுமாகும். சமூக அபிப்பிராயம் ஒருவருக்கு கீர்த்தியை உருவாக்கலாம். அல்லது அதை உடைக்கலாம்; அவருடைய எதிர்காலத்தையே பாதிக்கலாம். பெண்களைப் பொறுத்த வரையில், இது மிக முக்கியமானது. சமூக அபிப்பிராயம் மட்டிலான அச்சத்தை, பெண்கள் மீதான சமுதாயக் கட்டுப்பாட்டின் காத்திரமான வடிவமாகக் கொள்ளலாம். இந்தியாவில் உள்ள மிகப்பெரிய சனத்தொகை கூட, ஐரோப்பிய வாழ்க்கைக்கு நேர்மாறான ஒரு சூழலை அங்கே வடிவமைப்பதை நாம் காணலாம். இன்னொரு மனிதப் பிறவியைப் பார்க்காமல் ஒரு நிமிடம் கூட அங்கு கழியுமா என்பது சந்தேகமே. இதற்கு நேர் மாறாக இங்கிலாந்து போன்ற ஒரு நாட்டில், ஒரு வீதியில் செல்லும் போது, ஆளரவம் இல்லாது வீதி வெறிச்சோடிக்கிடப்பது, நடக்க முடியாத ஒன்றல்ல. ஆனால் இந்தியாவில் பொலிந்து விளங்கும் நட்புறவும், இந்திய மக்களின் பண்பட்ட மனிதாபிமானமும், அநாதரவு உணர்வுடன் எவரும் கைவிடப்படாது பார்த்துக் கொள்ளும் எனலாம். இத்தகைய சமூகச் சூழல்களில் வாழும் மனித வெள்ளத்தால் சூழப்பட்ட நிலையில் எனது உள்ளார்ந்த உணர்ச்சிகளும் எப்போதும் விழிப்பாக இருந்த இடம் தமிழ்நாடு. இந்த உணர்வு, சமூக ஊடாட்டங்களினால் மட்டும் வரவில்லை. இலட்சோப லட்சம் மக்களின் சமூக, பொருளாதார பரிதாபச் சூழ்நிலையை அடுத்தடுத்துப் பார்த்து அதனால் கிளர்ந்த உணர்வும் ஒரு காரணம். மக்களின் வாழ்வில் வறுமை புரிந்த கோரம் அப்பட்டமாகத் தெரிந்தது. அந்தத் துயரம் என்னை ஆழமாகப் பாதித்திருந்தது. அதைப் பற்றிக் குறிப்பிடாது இருப்பது தவறு என்றே கருதுகிறேன்.

(தொடரும்...)

காலைக்கதிர்



# நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நடத்திய மாவீரர் நினைவு விளையாட்டு விழா


நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் 19 ஆவது ஆண்டாக நடத்தப்பட்ட மாவீரர் நினைவாக தமிழர் விளையாட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

முதல் முறையாக 700 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டு கடுமையான போட்டிகளை எதிர்கொண்டனர்.

இம்முறை விளையாட்டு விழாவின் பிரதம விருந்தினராக நோர்வேயின் தேசிய உதைபந்தாட்ட அணியில் விளையாடி வருகின்ற ஈழத் தமிழன் மதுசன் சந்திரகுமார் கலந்து கொண்டார்.

அத்தோடு சிறப்பு விருந்தினராக புளியங்குள முறியடிப்புச் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை அருள்மதியின் சகோதரி தர்சினி கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்த விளையாட்டில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மகளிர் அமைப்பு மற்றும் விளையாட்டுக்கழகங்களின் பேருதவியும் நடுவர்களின் சிறப்பான பணியும் செயற்பாட்டாளர்களின் அயராத உழைப்பும் தமிழர் விளையாட்டு விழாவைச் சிறப்பாக நடத்துவதற்குப் பக்கபலமாக இருந்தன.



## விமரிசையாக நடைபெற்ற ஜேர்மனியில் காமாட்சி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா

ஜேர்மனி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெகு விமரிசையாக இடம்பெற்றது. இந்த ஆலயம் அன்னை காமாட்சிக்கு சிறு கோயில் போன்ற மாதிரி வடிவத்தை பக்தர்களின் உதவியுடன் உருவாக்கி அதில் அன்னையை எழுந்தருளச் செய்து தமது பக்தியெனும் சிரத்தையுடன் தினமும் பூசைகளைச் செய்து வந்தனர். பின்னர் கோயில் பெரிதாகக் கட்டப்பட்டு, அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்குத் தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

பார்ப்பவர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் சிலைகள் யாவும் கருங்கற்களால் மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.




# பிரிட்டனில் ஈழத்துச் சிறுமியின் சாதனை!

பிரிட்டனில் இல்பொர்ட், ரெட்பிரிட்ஜ் இல் உள்ள ஆராதனா நாட்டியப் பள்ளியில் நடனம் பயிலும் பிரகதா என்ற ஈழத்துச் சிறுமியின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு அண்மையில் லண்டன் பார்க்கிங் புறோட்வே அரங்கில் சுமார் 3 மணி நேரங்களுக்குத் தொடர்ச்சியாக நடந்தது.

நிகழ்வில் விருந்தினர்களாக, ரெட்பிரிட்ஜ் மேயர் பாம்ரா மற்றும், ஈஸ்ட் ஹாம் அவைதுணைத் தலைவர் போல் சத்தியநேசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறுமியை வாழ்த்தியுள்ளனர்.

பிரகதாவின் இந்த சாதனை கின்னஸ் பட்டியலுக்கான பரிந்துரைக்குச் செல்வதாகத் தெரி



விக்கப்படுகின்றது.

பிரகதா என்ற சிறுமி ஆராதனா நாட்டியப் பள்ளியின் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி சுஜந்தினி மகேஸ்வரனின் மாணவியாவார்.

பிரகதாவின் குரு சுஜந்தினி மகேஸ்வரன் மற்றும் பெற்றோர் என அனைவருமே ஈழத்தில் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



# பரிஸிலுள்ள முக்கிய வீதிகளை சுத்தப்படுத்திய தமிழ் இளைஞர்கள்



பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள முக்கிய வீதிகளை அங்கிருக்கும் தமிழ் இளைஞர்கள் சுத்தப்படுத்தியுள்ளனர்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை முன்னிட்டே கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாறான சுத்திகரிப்பு நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தலைநகர் பரிஸில் தமிழர்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். அங்குள்ள தமிழ் இளைஞர்கள் பரிஸ் மாநகர சபையுடன் இணைந்து அங்குள்ள வீதிகளை சுத்தம் செய்தனர். அது மட்டுமல்லாமல் மக்களுக்கு சுற்றுச் சூழல் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் பிரான்ஸ் நாட்டு மக்கள் தமிழ் இளைஞர்களை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இதுபற்றி அங்குள்ள தமிழ் இளைஞர் ஜே கூறுகையில்-

'பரிஸ் நகரின் முக்கிய வீதிகளைச் சுத்தப்படுத்தவும், மக்களுக்கு சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் 'பிரான்ஸ் கமலஹாசன் நற்பணி மன்றம்' இயக்கத்தின் தலைவர் பிரான்சுவாகஸ் தோன் ஏற்பாடு செய்திருந்தார்.

அதன்படி, பரிஸ் மாநகரசபையுடன் பேசி இணைந்து செயலாற்றலாம் என்று முடிவெடுத்தோம். குப்பைகள் அதிக மாக இருக்கும் வீதிகளில் குப்பைகளை அகற்றி அங்குள்ள மக்களிடம் இனிமேல் இது போல் குப்பைகளை வீசாதீர்கள் என்று கூறி, சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வையும்' ஏற்படுத்தினோம்.' எனக் குறிப்பிட்டுள்ளார்.



## தங்கநகைகளுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது!

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டிலிருந்து எடுத்துவரப்பட்ட அதிக பெறுமதி வாய்ந்த தங்க நகைகளுடன் பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவர் விமான நிலைய சுங்கப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப் பட்டுள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து வந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று விமான நிலைய சுங்கப் பிரிவின். பிரதிப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

தங்கநகைகளை காலணிக்குள் வைத்து மறைத்து எடுத்து வந்த போதே சுங்கப் பிரிவினர் அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

# தனியார்துறை ஓய்வூதிய வயதெல்லை; 60 ஆக உயர்த்த யோசனை முன்வைப்பு



## அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்கிறார் செனவிரத்ன

கொழும்பு, ஜூன் 28

தனியார்துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயது எல்லையை 55 இலிருந்து 60 வரை உயர்த்துவதற்கான யோசனை ஒன்றை முன்வைப்பதற்கு, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை, இவ் வாரத்துக்குள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுஎனஅமைச்சர் டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வாறானயோசனை ஒன்று, தொழிற்சங்கங்கள் பலவற்றால் முன்வைக்கப்பட்டுள்ளன. விரைவில் இடம்பெற இருக்கின்றதேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், இந்த விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து, அறிக்கை ஒன்றைத் தயாரித்து, அதனையும் அமைச்சரவையில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

தனியார்துறை ஊழியர்கள் 55 வயதில் ஓய்வூதியம் பெறவேண்டும். எனினும், அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயது 60 வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகையால், அரச துறை மற்றும் தனியார்துறை ஆகியவற்றுக்கு இடையில் ஏற்பட்டுள்ள ஒத்திசைவின்மையை நீக்குமாறு தொழிற்சங்கங்கள் கோரியிருந்தன.

இதேவேளை, 55 வயதில் ஓய்வூதியம் பெறுகின்றவர்களில் பலர், அந்த வேலைத் தளத்தில் அல்லது வேறொரு தனியார் நிறுவனத்தில் கடமையாற்றுகின்றனர். பல நிறுவனங்களில், வருடத்துக்கு வருடம் வழங்குகின்ற சேவைக்கால நீடிப்பு அல்லது கூட்டொப்பந்தத்தின் அடிப்படையில் அவை முன்னெடுக்கப் படுகின்றன.

இந்தச் செயற்பாட்டால், எங்களுக்குகிடைக்கின்ற சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் குறைந்து விடுகின்றன என்றும் ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, அரச, ஊழியர்கள் மற்றும் சேவை ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்றாகும் தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையில், இந்த விவகாரம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடி, பெறப்படும் அறிக்கையை, அமைச்சரவைக்கு முன்வைப்பேன்.-என்றார்.(எ)

# அரசியல் நோக்கங்களுக்காக குழப்பங்களை ஏற்படுத்த முயற்சி



## கல்வி அமைச்சர் காரியவசம் கூறுகிறார்

சந்தர்ப்பவாத அரசியல்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் திட்டமிட்ட வகையில் சட்டவிரோத சம்பவங்களை உருவாக்கி, அவற்றை அடிப்படையாகக்கொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பணிப்புறக்கணிப்புகளை மேற்கொள்ள சிலர் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

தெரணியகல, சிறிசமன் மத்திய மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக்கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனவாதத்தைத் தூண்டும் வகையிலான 21 சம்பவங்கள் மற்றும் சுகாதார அமைச்சுக்குள் நுழைந்து அதனைக் கைப்பற்றிய சம்பவம் ஆகியவற்றின் மூலம் இதனைக் காணமுடிகிறது.

அரசு இதுதொடர்பில மிகவும் அவதானிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

அரசை விமர்சித்து, அரசின் மீது தாக்குதல் தொடுக்கும் வகையில் சில ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன. எனினும், கடந்த ஆட்சிக் காலத்தைப் போன்று தற்போதைய அரசால் ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட மாட்டாது.- என்றார். (எ)

27 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான

## நடமாடும் சேவை சனியன்று ஒட்டுசுட்டான் மகா வித்தியில்

ஜனாதிபதி செயலகத்தின்பணிப்புரைக்கமைய முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 27 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்காகநடமாடும்சேவை நடத்தப்பட உள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அநிருத்தனன் அறிவித்துள்ளார்.

இந்தநடமாடும் சேவை எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை முல் லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுகள், பதிவுச் சான்றிதழ்கள், மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம், காணிப் பிணக்குகள், காணி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான சேவைகள், பொலிஸ் திணைக்களத்தின் சேவைகள், வேலைவாய்ப்பு, அழகுக்கலை தொடர்பான ஆலோசனைகள் ஆகியன உட்பட மத்திய அரசு, மாகாண அரசு ஆகியவற்றின் கீழ் உள்ள 53 நிறுவனங்களின் சேவைகள் வழங்கப்படவுள்ளன. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அனைத்துப்பொதுமக்களும்கலந்துகொண்டுபயனடையுமாறு பிரதேசசெயலர்வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ)

# தமிழர் அனைவரையும் ஐக்கியப்படுத்த தமிழ்த் தேசியத்தால் மட்டுமே முடியும்

## உரும்பிராய் கருத்தாய்வில் சட்டத்தரணி ஜோதிலிங்கம்





யாழ்ப்பாணம், ஜூன் 28

தற்போதைய காலகட்டத்தில் தனிமனித, சமூக வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து தமிழ் மக்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்தக் கூடிய சக்தி தமிழ்த் தேசியத்துக்கு மட்டுமே உண்டு என்று சிரேஷ்ட அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.ஜோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாழ்வுரிமை மையத்தின் ஏற்பாட்டில் 'தேசிய இனப் பிரச்சினையும் சமூக முரண்பாடும்' எனும் தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மையத்தின் இணைப்பாளர் என்.இன்பம் தலைமையில் யாழ்.உரும்பிராய் வடக்கு சரஸ்வதி கலையரங்கத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசியம் என்றால் அடிப்படையில் தேசியத்தையும், சமூகநீதியையும் உள்ளடக்கிய ஒன்றாகவே அமைந்துள்ளது. சமூக நீதியில்லாமல் தேசியமில்லை.

தேசியம் எனும்போது முழுமக்களும்இணைந்து போராடவேண்டியதொரு கருத்து நிலை. தேசியம் என்பது உள்ளடக்கத்தில் தேசியத்தையும், வெளியே இருந்து வரும் ஒடுக்கு முறையையும், உள்மட்டத்தில் மக்கள் மத்தியிலான சமத்துவத்தையும் வேண்டி நிற்கிறது.

ஆகவே, தாயகத்திலிருக்கக்கூடிய மக்களை ஒன்றாக இணைத்துக் கொள்ள வேண்டிய தேவை தேசியத்துக்கு மிக அவசியமாகவுள்ளது.

எங்களுடைய இனப் பிரச்சினை இன்னமும் தீரவில்லை. தமிழ்மக்கள் ஒரு தேசமாகவிருப்பது தொடர்ச்சியாக அழிக்கப் பட்டுவருகிறது. ஆகவே, தமிழ்மக்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்ற வரை அதனை எதிர்த்துப் போராடி அழிப்பிலிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ்மக்களுக்கு இருக்கிறது.

தமிழ்மக்கள் ஒரு சிறிய தேசிய இனம். சிறிய தேசிய இனம் என்னும் அடிப் படையில் அதற்கு வெளியேயிருந்து வருகின்ற புற ஒடுக்கு முறை அது அந்த இனம் சார்ந்த அனைவரையும் அழிக்கும்.

இந்த நிலையில் அந்தத் தேசிய இனத்திலிருக்கின்ற அனைவரும் இணைந்து போராட வேண்டி இருக்கிறது.

சிறியதொரு தேசிய இனமாக நாம் காணப்படுகின்றமையால் தமிழ்மக்களால் மாத்திரம் போராடி வெல்ல முடியாது. தாயகத்தில் வாழும் தமிழ் மக்களும் அதனுடைய நீட்சியாகப் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்களும் தமிழ்த் தேசியத்தின் அடிப்படைச் சக்திகளாக உள்ளன.

மலையக வாழ் மக்கள் உட்பட உலகம் முழுவதும் பரந்து வாழும் மக்கள் சேமிப்புச் சக்திகளாகவும், சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகத்தில் வாழும் அனைத்து ஜனநாயக சக்திகளும் நட்புச் சக்திகளாகவும் உள்ளன.

எனவே, தமிழ் மக்கள் தங்களுக்கான அடிப்படைச் சக்திகளையும், சேமிப்புச்சக்திகளையும், நட்புச் சக்திகளையும் இணைத்து வலுவாக இருக்கும் போது எங்களுடைய தேசிய இனப் பிரச்சினையில் முன்நோக்கி நகர முடியும். -என்றார். (எ)

# அ.தி.மு.க. பொதுச் செயலாளர் யார்?



## முதல்வருக்கு தினகரன் ஆதரவாளர்கள் நெருக்கடி

சென்னை, ஜூன் 28

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் யார் என்பதை முதலமைச்சர் பழனிச்சாமி தெளிவுபடுத்த வேண்டும். இல்லாவிட்டால் பொறுத்திருக்க மாட்டோம் என்று தினகரன் ஆதரவாளர்கள் போர்க் கொடி தூக்கி உள்ளனர். இது முதலமைச்சர் பழனிச்சாமிக்கு நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளன.

அ.தி.மு.க. (அம்மா) அணியில் முதல்வர் பழனிச்சாமி அணி, தினகரன் அணி என இரு பிரிவுகள் உருவாகி உள்ளன். இந்த நிலையில், சமீபத்தில் செவ்வி ஒன்றில் லோக்சபா துணை சபாநாயகர் தம்பிதுரை, ''சசிகலா மற்றும் முதல்வர் ஒப்புதலுடன்தான் ஜனாதிபதித் தேர்தலில், பா.ஜ.க. வேட்பாளருக்கு ஆதரவளிக்க முடிவு செய்யப்பட்டது'' எனத் தெரிவித்தார்.

அவரது இந்தக் கருத்தை எடப்பாடி பழனிச்சாமி ஆதரவு எம்.எல்.ஏக்களும், எம்.பிக்களும் கடுமையாக எதிர்த்தனர். ''கட்சியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ள சசிகலாவின் பெயரைத் தம்பிதுரை ஏன் உச்சரிக்க வேண்டும்'' எனக் கேள்வி எழுப்பினர். இதற்கு தம்பிதுரை பதில் அளிக்கவில்லை.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சு தினகரன் ஆதரவாளர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால், கட்சி யார் தலைமையில் இயங்கும் என்பது தொடர்பில் அ.தி.மு.க. (அம்மா) அணியில் தினகரன்-எடப்பாடி பழனிச்சாமி ஆதரவு எம்.எல்.ஏக்கள் இடையே மெல்ல, மெல்ல பனிப்போர் ஏற்பட்டுள்ளது. இந்த பனிப்போர் வலுத்து இரு தரப்பு எம்.எல்.ஏக்களும் தற்போது மாறி மாறி கருத்துக்களை வெளியிடத் தொடங்கி உள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளருக்கு யார் முதலில் ஆதரவு கொடுப்பது என்பதில் இந்த இரண்டு அணிகளுக்கும்இடையேயான மோதல் பகிரங்கமாக வெளிச்சத்துக்கு வந்தது. ஆனால், இவ்வாறு அ.தி.மு.க. அம்மா அணியினர் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து சிக்கல்களை உருவாக்குகின்றமை தொடர்பில் எடப்பாடி பழனிச்சாமியோ , தினகரனோ இது வரை எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் காத்து வருகின்றனர். இதனால் அந்த அணியில் மோதல் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது.

இந்த மோதல் காரணமாக அ.தி.மு.க. (அம்மா) அணி யார் தலைமையில் செயற்படுகிறது; சசிகலாவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் கட்சியில் தொடர்பு இல்லையா எனச் சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவற்றுக்கு முதல்வர் உரிய விளக்கம் அளித்தால் மட்டுமே, பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பலாத்கார முயற்சியை எதிர்த்த பெண் எரித்துக் கொலை!

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பலாத்கார முயற்சியை எதிர்த்த 18 வயது இளம் பெண் ஒருவரை உயிருடன் எரித்துக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சஹிகணேஷ்பூர் பகுதியில் ஒரு வீட்டில் மேற்படி பெண் தனியாக இருந்தார். அப்போது அயல்வீட்டு இளைஞர் ஒருவர் வீட்டுக்குள் நுழைந்து, அந்தப் பெண்ணை பலாத்காரம் செய்ய முயற்சித்தார். அந்தப் பெண் மறுக்கவே மண்ணெண்ணெயை அவர் மீது ஊற்றி பற்ற வைத்துள்ளார். இதன் போது அந்தப் பெண் உயிரிழந்துள்ளார். (ச)

## இந்திய இராஜதந்திர உறவை இலங்கை மதிக்கவில்லை!

### தமிழக முதலமைச்சர் குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 28

மத்திய அரசின் இராஜதந்திர உறவை இலங்கை அரசு மதிக்காமல் நடக்கிறது.

-இவ்வாறு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீண்டும் கடிதம் அனுப்பிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-


தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனாலும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படும் சம்பவங்களும், சிறை பிடிக்கப்படும் சம்பவங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இத்தகைய போக்குகள் மீனவர்களை மட்டுமன்றி தமிழக மக்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், தமிழக மீனவர்களின் படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.-என்றுள்ளது. (ச)

## ஜனாதிபதித் தேர்தலில் இரட்டை இலையைப் பறித்த கட்சிக்கே அ.தி.மு.க. ஆதரவு!



திண்டுக்கல் லியோனி

ஈரோடு, ஜூன் 28

இரட்டை இலையை பறித்த கட்சிக்கே ஜனாதிபதி தேர்தலில் அ.தி.மு.க. ஆதரவு அளித்துள்ளது என திண்டுக்கல் லியோனி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் நம்பியூர் பஸ் நிலையத்தில் தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட மாநில தலைமைக்கழகப் பேச்சாளர் ஐ. லியோனி பேசினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் 11 முறை தொலைக்காட்சிகளிலும், செய்தித் தாள்களிலும் செங்கோட்டையன் அமைச்சர் ஆவார் எனக் கூறினர். ஆனால், அவர் இப்போது சசிகலாவின் அடிமையாகி காலில் விழுந்த பிறகுதான் அமைச்சர் ஆகியுள்ளார்.

தன் கட்சியின் தலைவியின் படத்தைக் கூட ரகசியமாகத்தான் போட வேண்டி உள்ளது. சசிகலாவின் படத்தை யார் எங்கு பார்த்தாலும் கிழித்து எறிகின்றனர். ஜெயலலிதா பல சொத்துகளைச் சம்பாதித்தார். ஆனால், அவை அநாதையாகக் கிடக்கின்றன.

கலைஞர், தான் குடியிருந்த வீட்டை கூட மருத்துவமனைக்காக எழுதிக்கொடுத்துள்ளார். தேசிய கட்சிகளுக்கு கூட சின்னங்கள் மாறியுள்ளன. ஆனால் ஒரே சின்னமான உதயசூரியன் சின்னத்தில் கலைஞர் வெற்றி பெற்றுள்ளார்.

தமிழகத்தின் தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி சசிகலாவின் பினாமியாக உள்ளார். வரும் காலத்தில் தி.மு. கவுக்கு ஆதரவு கொடுத்து ஆட்சி அமைக்க அனைவரும் பாடுபட வேண்டும்.- என்றார். (ச)

## இந்த ஆண்டு 'பெமினா மிஸ்' இந்தியாவாக ஹரியானாவைச் சேர்ந்த மானுஷி தேர்வு!

மும்பை, ஜூன் 28

2017 ஆம் ஆண்டுக்கான பெமினா மிஸ் இந்தியா (femina miss india) போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மும்பையில் உள்ள யாஷ் ராஜ் கலையகத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஹரியானாவைச் சேர்ந்த மானுஷி சாலார், பெமினா மிஸ் இந்தியாவாகத் தேர்வானார்.

இந்த முறை போட்டியில் திரிபுரா, அருணாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட், ஜார்கண்ட் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட மாநிலங்களில் இருந்து இளம் பெண்கள் பங்கேற்றனர். முதன் முறையாக இந்த நிகழ்வில் பங்கேற்றவர்கள் மனிஷ் மல்ஹோத்ரா வடிவமைத்த இந்திய ஆடைகளை அணிந்து இறுதிச் சுற்றில் வலம் வந்தனர்.



நேஹா துபியா, வலுஸ்கா டி சொஸா, தீபனிதா சர்மா மற்றும் பார்வதி ஓமனக்குட்டன் ஆகியோரால் நிகழ்ச்சி வழிநடத்தப்பட்டது. தென்னிந்திய பகுதி போட்டியாளர்களுக்கான ஆலோசகராக 'பில்லா-2 படத்தில் நடித்து பிரபலமான கேரளாவைச் சேர்ந்த நடிகை பார்வதி ஓமனக்குட்டன் நியமிக்கப்பட்டிருந்தார். (ச)

## நாயைக் காப்பாற்றச் சென்று கையை இழந்த இளைஞர்!

மும்பை,ஜூன் 28

மும்பையைச் சேர்ந்த முதித் தந்த்வாடே என்ற இளைஞர், ஏரியில் குதித்த நாயைக் காப்பாற்றச் சென்று முதலையிடம் கடி வாங்கிக் கையை இழந்துள்ளார்.

நாக்பூரைச் சேர்ந்தவர் முதித் தந்த்வாடே. சம்பவ தினத்தன்று கர்நாடகாவின் ராமனாகரம் மாவட்டத்தின் காட்டுப்பகுதியில் உள்ள ஒரு கோவிலுக்குத் தன்னுடைய நண்பர்களுடன் சென்றுள்ளார்.

அப்போது அவர் தன்னுடன் நாயையும் அழைத்துச் சென்றுள்ளார். காட்டுக்குள் சென்றவர்கள் அங்கிருக்கும் ஏரி ஒன்றைக் கண்டனர். அப்போது, அவர்களுடன் வந்த நாய் திடீரென்று ஏரியில் இருந்த தண்ணீருக்குள் குதித்துள்ளது.

தந்த்வாடே, நாயை வெளியில் கொண்டு வர வேண்டும் என்பதற்காக தண்ணீருக்குள் குதித்துள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக ஏரியினுள் இருந்த முதலை, தண்டவாடேவின் முழங்கையை கடித்துக் குதறியது. அவரது நண்பர்கள் முதலையிடம் சிக்கிய அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் அவரது கைத் திசுக்கள் இறந்து போனமையால்



முழங்கையை நீக்க முடிவு செய்துள்ளார்.

# இரசாயனத் தாக்குதலை மேற்கொள்ள சிரிய ஜனாதிபதி மீண்டும் திட்டம்!

## குற்றஞ்சாட்டுகிறது அமெரிக்கா

வொஷிங்டன்,ஜூன் 28

சிரியாவில் மற்றுமோர் இரசாயனத் தாக்குதலை மேற்கொள்வதற்கு அந்த நாட்டு ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் திட்டமிட்டுள்ளார் என அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது.

சிரியா நாட்டு ஜனாதிபதி பசர் அல் ஆசாத்துக்கு எதிராக ஒரு பிரிவினர் போராடி வருகிறார்கள். இதனால் அங்கு 6 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்படுபவர்கள் புரட்சி படை ஒன்றைத் தொடங்கிப் போரிட்டு வருகிறார்கள். இந்தப் படைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்து வருகிறது. அதே நேரத்தில் அரசுக்கு ரஷ்யா ஆதரவாக உள்ளது.

இந்தநிலையில், உள்நாட்டுப் போரைப் பயன்படுத்தி ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றித் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

பல பகுதிகள் புரட்சிப் படையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இரு பகுதிகளையும் மீட்பதற்கு சிரிய இராணுவம் தொடர்ந்தும் போரிட்டு வருகிறது.



சிரிய ஜனாதிபதி

கடந்த ஏப்ரல் மாதம் புரட்சிப்படையினர் கட்டுப்பாட்டில் இருந்த கான்ஷேக்வுன் என்ற நகரை மீட்பதற்கு இராணுவம் தாக்குதல் நடத்தியது.

அப்போது இரசாயனக் குண்டுகளை வீசியது. அதில் நரம்பு மண்டலத்தை உடனடியாகப் பாதித்து உயிரைப் பறிக்கும் மிக மோசமான குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

இதில் புரட்சிப்படை வீரர்கள், அப்பாவிப் பொதுமக்கள் என 80 பேர் பலியாகினர். இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்த நிலையில், மீண்டும் சிரியா இரசாயனத் தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருக்கிறது எனக்கூறி இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அமெரிக்கா வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்-

'சிரியாவிலுள்ள அப்பாவி மக்களையும், குழந்தைகளையும் மீண்டும் இரசாயனத் தாக்குதல் நடத்திக் கொல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் சிரியாவில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலை போல் இந்தத் தாக்குதல் இருக்க வாய்ப்புள்ளது. அவ்வாறு நடத்தினால் இதற்கான பெரிய விலையை சிரிய ஜனாதிபதி கொடுக்க நேரிடும்' என்றும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

சமீப நாள்களாகப் போரில் புரட்சிப்படைகளுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து புரட்சிப்படைகளின் பகுதிகளைக் கைப்பற்ற சிரிய அரச படைகள் முன்னேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஹிஸ்புல் தலைவர் சர்வதேச பயங்கரவாதி; அமெ. அறிவிப்பு!

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இயங்கும் ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத அமைப்பின் தலைவராக இருக்கும் சலாவுதீனை சர்வதேசப் பயங்கரவாதி என்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இயங்கும் தீவிரவாத அமைப்பு ஹிஸ்புல் முஜாகிதீன். இதன் தலைவராக இருப்பவர் சலாவுதீன். இந்த அமைப்பு இந்தியாவில் பல்வேறு நாசவேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளது. இதன் தலைவராக இருக்கும் சலாவுதீன் பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் இணைந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறார்.

அமெரிக்காவின் இந்த முடிவை இந்தியா வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## 6 இஸ்லாமிய நாடுகளுக்குத் தடை: ட்ரம்புக்கு சாதகமாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு

இஸ்லாமியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஆறு இஸ்லாமிய நாட்டு மக்கள் அமெரிக்காவுக்குள் வருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விதித்த தடையை அமுல்படுத்தலாம் என்று அமெரிக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

ஆறு இஸ்லாமிய நாட்டு மக்கள் அமெரிக்காவுக்குள் வருவதற்கு 90 நாள்களுக்கும் அகதிகளுக்கு 120 நாள்களுக்கும் தடை விதித்தார்.

இதனை அடுத்து, இது தொடர்பான வழக்கு அமெரிக்க கீழ் நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், ட்ரம்பின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தது. தடை விதித்தைத் தொடர்ந்து, இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

இந்தத் தடை உத்தரவு மூலம், அமெரிக்கர்களுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பில் இருக்கும் வெளிநாட்டவருக்கு எந்தப் பாதிப்பும் இருக்கக்கூடாது. ஆனால், மற்ற வெளிநாட்டவருக்கு இந்தத் தடை உத்தரவு பொருந்தும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. மேலும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்தத் தடை உத்தரவு தொடர்பான இறுதியான முடிவு எடுக்கப்படும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

## ஆர்ஜென்டீனாவில் பஸ் விபத்து: 15 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!



புவனேர்ஸ் அயர்ஸ்,ஜூன் 28

ஆர்ஜென்டீனாவின் மென்டோஸா மாகாணத்தில் நடனக் குழு ஒன்று பயணித்த பஸ் விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தோரில் பலர் சிறுவர்கள் ஆவர்.


இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான பஸ்ஸில் சுமார் 50 பேர் பயணித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ஜென்டீனாவின் தலைநகர் புவனேர்ஸ் அயர்ஸில் இருந்து புறப்பட்ட இந்த பஸ் மென்டோஸாவில் நடத்தப்பட இருந்த நடனப் போட்டி ஒன்றில் கலந்துகொள்ளும் பொருட்டு சிறுவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களை ஏற்றிச் சென்றுள்ளது.

இந்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை ஆர்ஜென்டீனாப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ச)

## பயங்கரவாதத்தை அழித்து ஒழிப்போம்!



பிரதமர் மோடி– ட்ரம்ப் சபதம்

வொஷிங்டன், ஜூன் 28

பயங்கரவாதத்தையும், பயங்கரவாத இயக்கங்களையும் அழித்தொழிப்போம்.

-இவ்வாறு இந்தியப் பிரதமர் மோடி மற்றும் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை மாளிகையில் பேச்சில் ஈடுபட்ட பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் மோடி பேசுகையில்-

'நாங்கள் பயங்கரவாதம் தொடர்பாக பேச்சு நடத்தினோம். பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இணைந்து செயற்பட ஒப்புக் கொண்டுள்ளோம்.'-என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பேசுகையில்-

'இருநாடுகளும் பயங்கரவாத இயக்கங்களை இல்லாமற் செய்யத் தீர்மானித்துள்ளோம்.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு நட்புறவு மிகவும் முக்கியமானது.

இருநாடுகளும் பயங்கரவாதத்தின் தீமைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நாங்கள் தீவிர இஸ்லாமிய பயங்கரவாதத்தை அழிப்போம்.-என்றார்.

## பூச்சிகளை அள்ளித் தின்று தங்கம் வென்ற பெண்!

சீனாவில் 5 நிமிடங்களுக்குள் சுமார் ஒன்றே கால் கிலோ பொரித்த பூச்சிகளை உண்டு பெண் ஒருவர் தங்கம் வென்றுள்ளார்.

சீனாவின் யூனான் மாநிலத்தில் பொரித்த பூச்சிகள் கடை மிகவும் பிரபலம். இங்கு மக்கள் பூச்சிகளைச் சுவைத்து உண்பார்கள்.

அங்கு அதிக பொரித்த பூச்சிகளைக் குறைவான நேரத்துக்குள் உண்பவருக்குப் பரிசு என்று அறிவித்திருந்தது அமைப்பு ஒன்று. இதற்காக பொரித்த பூச்சிகள் தயாராக வைக்கப்பட்டன. போட்டியில் பலர் பங்குபற்றினர்.

ஆனால், வெளியூரைச் சேர்ந்த பெண் ஒருவரே அதிக பூச்சி



களை உண்டு வெற்றி பெற்றார். (ச)



# அதிரடி வீரர் அசேலவுக்கு வெளிநாட்டில் வாய்ப்பு!

கொழும்பு, ஜூன் 28

எதிர்வரும் பங்களாதேஷ் பிரிமியர் லீக் ரி20 போட்டிகளில், கடந்த வருடம் குமார் சங்கக்காரவை பிரதிநிதித்துவப்படுத்திய அதே டாக்கா டைனமைட்ஸ் அணி இம்முறை இலங்கை அணியைச் சேர்ந்த அதிரடி மற்றும் சகலதுறை ஆட்டக்காரரான அசேல குணரத்னவை உள்வாங்க உள்ளது என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிகின்றன.

அண்மையில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டிகளுக்காக, சம்பியன் பட்டத்தை வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம் பிடித்திருந்தாலும், அசேல குணரத்ன எவ்விதமான போட்டிகளிலும் விளையாடி இருக்கவில்லை.

எனினும், அவ்வணியுடன் இணைந்து கொண்டு பெற்ற அனுபவம் சந்தேகமே இல்லாமல் அளவில்லாத பெறுமதிமிக்கதாகும். கடந்தாண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியில் குமார் சங்கக்காரவின் 36 ஓட்டங்களின் பங்களிப்புடன் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிய நடப்பு சம்பியன் டாக்கா டைனமைட்ஸ் அணி சார்பாக களமிறங்கவுள்ள போதிலும், அணியின் உத்தியோகபூர்வ அதிகாரிகள் இது சம்பந்தமாக எவற்றையும் உறுதிப்படுத்தவில்லை.

எனினும், அவ்வணி உரிமையாளர்கள் அசேல குணரத்னவுடன் ஒப்பந்த மொன்றை செய்துள்ளனர்.

அசேல குணரத்ன, அண்மைய காலங்களில் இருபதுக்கு 20 போட்டிகளில் வளர்ந்து வரும் அதிரடி வீரராக கணிக்கப்படுகின்றார். சர்வதேச போட்டிகளில் அறிமுகம் பெற்றதிலிருந்து மிகப் பெரிய முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றார். 2016-17ஆம் ஆண்டுக்கான தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தின் போது திறமைகளை வெளிப் படுத்திய அதேநேரம் நம்பிக்கையூட்டும் வீரராகவும் வளர்ந்து வருகின்றார்.

அத்துடன், ஆஸ்திரேலிய மண்ணில் நடைபெற்ற இருபதுக்கு 20 போட்டிகளிலும் அதிரடி துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி இலங்கை அணியை வெற்றிப் பாதைக்கு வழி நடத்தியிருந்த அதே வேளை, அன்றிரவு உலக கிரிக்கெட் அரங்கில் அநேக கிரிக்கெட் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தார்.

மேலும், இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், அண்மைய காலங்களில் அசேல குணரத்னவின் துடுப்பாட்டம் குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அதேவேளை எதிர்காலத்தில் சிறந்த கிரிக்கெட் வீரராக உருவாகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அதேநேரம், டாக்கா டைனமைட்ஸ் அணி சார்பாக களமிறங்கவுள்ள ஏனைய வீரர்களாக பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த ஷஹிட் அப்ரிடி, மொஹமட் அமீர் ஆஸ்திரேலிய அணி வீரர் ஷேன் வொட்சன் மேற்கிந்திய தீவுகள் அணியின் சுழல் பந்து வீச்சாளரான சுனில் நரேன், இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் குமார் சங்கக்காரவும் அந்த அணி சார்பாக களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய பயிற்றுவிப்பாளர் பதவிக்கு மஹேல விண்ணப்பிக்கவில்லையாம்!

கொழும்பு, ஜூன் 28

இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் மற்றும் துடுப்பாட்ட ஜாம்பவானுமாகிய மஹேல ஜயவர்தன, இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கவுள்ளார் என நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், இந்த செய்திகளில் உண்மை இல்லை எனவும், இப்போதைய நிலையில் முழு நேர பயிற்றுவிப்பாளராக எந்த அணியிலும் இணைந்து கொள்ளும் நோக்கமும் இல்லை என்றும் மஹேல தெரிவித்துள்ளார்.



இலங்கை அணியிலிருந்து குமார் சங்கக்காரவுடன் ஓய்வு பெற்ற மஹேல ஜயவர்தன பல்வேறு கிரிக்கெட் அணிகளுக்கு பயிற்சியாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

அந்த வகையில், இவ்வருடம் நடைபெற்ற இந்திய முதல் தர இருபதுக்கு 20 தொடரா ஐ.பி.எல். தொடரில் மும்பாய் இந்தியன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளராக இணைந்து கொண்ட மஹேல ஜயவர்தன மும்பை இந்தியன்ஸ் அணி கிண்ணத்தை கைப்பற்றுவதற்கு பெரும் பங்காற்றியிருந்தார்.

அத்துடன், மஹேலவின் வழிகாட்டலில் ஐ.பி.எல். போட்டிகளில் மும்பை இந்தியன்ஸ் அணி முழு ஆதிக்கத்தையும் செலுத்தியிருந்தது.

அத்துடன், சிறிய காலம் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராகவும் கடமையாற்றியதோடு, பங்களாதேஷ் பிரிமியர் லீக் போட்டிகளில் களமிறங்கிய குல்னா டைட்டன்ஸ் அணிக்காகவும் தமது பங்களிப்பை வழங்கியிருந்தார்.

இந்த நிலையில், கடந்த ஆண்டு சன் ரைசர்ஸ் அணியை இறுதிப் போட்டிக்கு வழி நடத்திய டொம் மூடியுடன் இந்திய கிரிக்கெட் அணித் தலைமை பயிற்றுவிப்பாளர் பதவிக்காக மஹேல விண்ணப்பித்துள்ளார் என செய்திகள் வெளிவந்தன.

இந்திய அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து அனில் கும்ளே ராஜினாமா செய்தமையை அடுத்தே இவ்வாறான பல்வேறு பட்ட செய்திகள் வெளிவந்துள்ளன.

எவ்வாறெனினும் இந்திய அணியுடனான எல்லாச் செய்திகளையும் தான் நிராகரிக்கிறேன் என மஹேல தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னைப் பற்றிய பல்வேறான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன, இன்றைய நிலையில் நான் முழுநேர பயிற்றுவிப்பாளர் பதவியை எதிர்பார்க்கவில்லை. நான் முழுமையாக மும்பை இந்தியன்ஸ் மற்றும் குல்னா அணிகளில் கவனம் செலுத்துகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அடுத்த ஒலிம்பிக் ஓட்டப் போட்டியை கெலரியில் அமர்ந்து பார்ப்பேன்!



உசைன் போல்ட் கூறுகிறார்

லண்டன், ஜூன் 28

அடுத்த ஒலிம்பிக்கில் 100, 200 மீற்றர் ஓட்டப் பந்தயங்களை கெலரியில் அமர்ந்து பார்ப்பேன் என்று ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

உலகின் அதிவேக ஓட்டப் பந்தய வீரர் உசைன் போல்ட், 100, 200 மீற்றர் ஓட்டங்களில்உலக சாதனையாளர் ஆவார்.

100 மீற்றரை 9.58 வினாடியிலும், 200 மீற்றரை 10.13 வினாடியிலும் கடந்து சாதனை படைத்துள்ளார். ஒலிம்பிக் போட்டியில் 8 தங்கப் பதக்கம் வென்று இருக்கிறார்.

செக்குடியரசில் நடக்கும் உலக தடகள போட்டியில் பங்கேற்கச் சென்றுள்ள அவர் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் சிறந்த ஆட்டங்களை பெற்றிருக்கிறேன். எனக்கு என்ன தேவையோ அதை அனைத்தையும் செய்து விட்டேன். தற்போது அது முடிவுக்கு வந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

லண்டனில் இடம்பெற இருக்கும் உலக தடகள சம்பியன் போட்டியில் பங்கேற்க ஆர்வமாக இருக்கிறேன். அந்தப் போட்டி எனக்கு உணர்வு பூர்வமாக இருக்கும்.

அடுத்த ஒலிம்பிக் போட்டியில் 100, 200 மீற்றர் ஓட்டப்பந்தயங்களில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை கெலரியில் அமர்ந்து பார்ப்பேன்.

தற்போது நிறைய இளம் வீரர்கள் வருகிறார்கள். இதில் யார் பட்டத்தை வெல்வார்கள் என்பதை பார்க்க ஆர்வமாக இருக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# போர்டின் ராஜினாமாவை அடுத்து ஹத்துருசிங்கவை நாடும் எஸ்.எல்.சி!

கொழும்பு, ஜூன் 28

இலங்கை அணியின் பயிற்றுநர் பதவியை கிரஹம் போர்ட் ராஜினாமாச் செய்ததை அடுத்து இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுநர் ஒருவரை தேடுவதில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜயவர்தன பயிற்றுநராவதற்கான பக்குவமும் முதிர்ச்சியும் இல்லை என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால கடந்த வாரம் கூறிய நிலையில், இப்போது ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் (எஸ்.எல்.சி.) கவனம் சந்திக ஹத்துருசிங்கவின் பக்கம் திரும்பியுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியிலிருந்து இலங்கை வெளியேறியதை அடுத்து, அணி முகாமையாளர் அசன்க குருசிங்க தனது விடயத்தில் மூக்கைத் நுழைக்கிறார் என குறைகூறிய போர்ட், தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு நாட்டை விட்டுச் சென்றார்.

இங்கிலாந்தில் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிவரை போர்டை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் ஒப்பந்தம் செய்திருந்தது.

போர்ட் சென்றமையை அடுத்து ஹத்துருசிங்கவை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் நாடியுள்ளது. இலங்கையின் முன்னாள் ஆரம்ப வீரரும் ஆரம்ப பந்துவீச்சாளருமான சந்திக்க ஹத்துருசிங்க தற்போது பங்களாதேஷ் பயிற்றுநராக பதவிவகிப்பதுடன், அவரும் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணம் வரை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சந்திக்க ஹத்துருசிங்கவுடன் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தொடர்ச்சியாக பேச்சுகளில் ஈடுபட்டுள்ளது என தகவல்கள் வெளியாகி வருகின்றன.

ஹத்துருசிங்கவின் பயிற்றுவிப்பில் உலக கிரிக்கெட் அரங்கில் பங்களாதேஷ் அணி பல படிகள் முன்னேறியதுடன் இங்கிலாந்து, இலங்கை அணிகளை அண்மையில் டெஸ்ட் போட்டிகளில் வெற்றிகொண்டது.

நடந்து முடிந்த சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி வரை பங்களாதேஷ் முன்னேறியமை மற்றொரு முக்கிய விடயமாகும்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் 'நிழல் பயிற்றுநர்' என கருதப்பட்ட சந்திக்க ஹத்துருசிங்கவை பயிற்றுநராக்க வேண்டும் என குமார் சங்ககார திரும்பத் திரும்ப வலியுறுத்திய போதிலும் அப்போதைய ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் சர்ச்சைக்குரிய தலைவர் டி.எஸ்.டி சில்வாவினால் புறக்கணிக்கப்பட்டார்.


இதனை அடுத்து ஆஸ்திரேலியா பயணமான ஹத்துருசிங்க அங்கு நியூ சௌத் வேல்ஸ் அணியின் உதவிப் பயிற்றுநராகவும் சிட்னி தண்டர்ஸ் அணியின் தலைமைப் பயிற்று நராகவும் செயற்பட்டார்.

பங்களாதேஷ் அணியுடன் அண்மையில் இலங்கை வந்திருந்த போது கூட இலங்கை அணிக்கு பயிற்றுவிக்க வாய்ப்பு கிடைத்தால் அதனைப் பெருமையுடன் ஏற்றுக் கொள்வேன் என கூறியிருந்தார்.

ஆனால், ஸிம்பாப்வே அணி இன்னும் சில தினங்களில் இங்கு வருகை தரவுள்ள நிலையில் இப்போதைக்கு பதில் பயிற்றுநராக களத்தடுப்புப் பயிற்றுநர் நிக் போத்தா செயற்படுவார் என நம்பப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை அணியின் புதிய பயிற்சியாளர் நியமனம் தொடர்பில் மேலும் இரண்டு பேரிடம் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, நியூஸிலாந்து அணியின் முன்னாள் வீரர் ஸ்டீபன் பிளமிங்குடனும், ஆஸ்திரேலிய வீரர் டொம் மூடியுடனும் பேச்சு நடைபெற்று வருகிறது என தெரிவிக்கப்படுறது. இருந்தாலும், ஹத்துருசிங்கவுக்கே அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன.




# பெண்கள் உலகக் கிண்ணக் கிரிக்கெட்: மே.இ. தீவுகளை வீழ்த்தியது ஆஸி!




டவுன்டான், ஜூன் 28

உலக கிண்ணக் கிரிக்கெட்டில் நடப்பு சம்பியன் ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியியை அடித்து நொருக்கியுள்ளது.

8 அணிகளுக்கு இடையிலான 11 ஆவது பெண்கள் உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

இந்த நிலையில், டவுன்டானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 4 ஆவது லீக்கில் மேற்கிந்தியத் தீவுகளும், 6 முறை சம்பியனான ஆஸ்திரேலியாவும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 47.5 ஓவர்களில் 204 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹாலே மத்யூஸ் 46 ஓட்டங்களும், அணித் தலைவி ஸ்டெபானி டெய்லர் 45 ஓட்டங்களும் எடுத்தனர். ஆஸ்திரேலிய தரப்பில் எலிசி பெர்ரி 3 விக்கெட்டுகளும், ஜெஸ் ஜானாசென், பீம்ஸ் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

அடுத்து களம் இறங்கிய ஆஸ்திரேலியா 38.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 205 ஓட்டங்களைச் சேர்த்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எளிதில் வெற்றி கண்டது.

தொடக்க வீராங்கனைகள் நிகோல் பால்டன் 107 ஓட்டங்களும் (116 பந்துகள், 14 பவுண்டரிகள், ஆட்டம் இழக்காமல்), பெத் மூனி 70 ஓட்டங்களும் விளாசினர். அறிமுக ஒரு நாள் போட்டியிலேயே சதம் அடித்தவரான 28 வயதான பால்டன், உலக கிண்ணத்திலும் தனது முதல் ஆட்டத்திலேயே சதம் அடித்து அசத்தி இருக்கிறார். அவரே ஆட்டநாயகியாகத் தேர்வு ஆனார்.

# மலிங்க மீது விசாரணை; அவசர கலந்துரையாடல்!

கொழும்பு, ஜூன் 28

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்கவிற்கு அதிரடி விசாரணையொன்றை முன்னெடுப்பது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்று குழு அதிகாரிகள் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த விதிமுறைகளை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மலிங்கவை விசாரணை செய்கின்றமை குறித்து மேற்கொள்ளவுள்ள இந்தக் கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் பின்னர் இரு தடவைகள் லசித் மலிங்க ஒப்பந்த விதிமுறைகளை மீறியுள்ளார் எனவும் ஊடகங்களுக்கு அதிகாரிகளின் அனுமதியில்லாமல் கருத்து தெரிவித்துள்ளார்




போன்ற குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே, கிரிக்கெட் சபையின் அதிகாரிகள் மட்ட அவசர கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சூட்டுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படவேண்டியநடவடிக்கை என்ன?

– இந்த விடயம் குறித்து யாழ். நீதிவான் நீதிமன்றம் எதிர்வரும் 11 ஆம் திகதி தனது கட்டளையை வழங்கும்.

இந்த வழக்கு யாழ். நீதிவான் சத்தீஸ்வரன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே கட்டளையை 11 ஆம் திகதி வழங்கும் என நீதிவான் தெரிவித்தார்.

நேற்று இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே எதிரிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரெமீடியஸ் முதலாவது எதிரி சப்இன்ஸ்பெக்டர் சில விடயங்களை நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றார் எனக் குறிப்பிட்டார் :-

மேற்படி சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற உடனேயே அது குறித்துத்தனது தகவல் புத்தகத்தில் உண்மை விவரங்கள் முழுவதையும் தான் பதிவு செய்தார் எனவும், மேலதிகாரிக்கும் அது தொடர்பில் தெரியப்படுத்தினார் எனவும் முதலாம் எதிரி சார்பில் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அச்சமயத்தில், மேற்படி கொலைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இடையில் குறுக்கிட்டார்.

“விடயத்துடன் நேரில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி சூட்டுச் சம்பவம் குறித்து உடனடியாகத் தனது பதிவுப் புத்தகத்தில் பதிந்துள்ளமையுடன், அது குறித்து மேலதிகாரியின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளார். ஆனால், இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்ட முதல் தகவல் விபத்துச் சம்பவத்தில் இருவரும் உயிரிழந்தனர் என்றே கூறப்பட்டுள்ளது. சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களை விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாக நீதிமன்றுக்குக் காட்டுவதற்கு ஒருமுயற்சிஎடுக்கப்பட்டுள்ளது. இதைச் செய்தவர் யார் என்று கண்டு பிடிக்க வேண்டும். நீதிமன்றத்தைத் திட்டமிட்டே தவறான வழியில் திசை திருப்ப எடுக்கப்பட்ட முயற்சியின் சூத்திரதாரியை அடையாளம் காண வேண்டும்.” – என்று சுமந்திரன் வாதிட்டார்.

இந்த விடயங்களைச் செவிமடுத்த நீதிவான், இது தொடர்பான கட்டளையை அடுத்த தவணையின் போது – காலை 11 ஆம் திகதி – வழங்குவார் என அறிவித்தார்.

இந்த வழக்கில் உயிரிழந்த இரு பல்கலைக்கழக மாணவர்களில் ஒருவரின் தாயார், பொலிஸ் அதிகாரி ஒருவரினால் மிரட்டப்பட்டமை தொடர்பில் மேற்படி பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுமந்திரன் ஏற்கனவே நீதிமன்றத்திடம் முறைப்பாடு செய்திருந்தார். அது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அந்த அதிகாரி தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்துவதற்குப் பொலிஸ் திணைக்களம் தீர்மானித்திருக்கின்றது என்றும், அதற்கு நீதிமன்றம் அனுமதி தரவேண்டும் என்றும், நீதிமன்றில் ஆஜரான பொலிஸார் தரப்பில் கூறப்பட்டது.

திணைக்களரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது திணைக்கள விடயம். அதில் நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை என்று குறிப்பிட்ட நீதிமன்றம், மேற்படி விடயம் தொடர்பாக நீதிமன்றம் கோரிய அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு மீண்டும் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்டோர் சார்பில் ஜனாதிபதியின் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஐந்து பொலிஸாரின் சார்பில் சட்டத்தரணி ரெமீடியஸ் ஆஜரானார். (உ)

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை ஒன்றை நேற்று மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்திடம் கையளித்துள்ளார்.

தற்போது பதவியில் உள்ள இரு அமைச்சர்கள் தொடர்பில் நால்வர் கொண்ட புதிய விசாரணைக் குழு ஒன்றையும் –

ஏற்கனவே பதவி விலகிய இருஅமைச்சர்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகளை மீளாய்வு செய்து உரிய பரிந்துரைகளைச் செய்வதற்கு மீளாய்வுக் குழு ஒன்றையும் –

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் நியமிக்க இருக்கையிலேயே விசாரணைக்குழு அமைக்கும் பிரேரணைக்கு – தெரிவுக் குழு அமைக்கும் பிரேரணைக்கு – அதுவும் முதல்வர் மற்றும் அவரது அமைச்சுகள் உட்பட அனைத்துத் தரப்புகள் குறித்தும் விசாரிக்க வழி செய்யும்பிரேரணைக்கு–முன்னறிவித்தல்கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப்பிரேரணையின் முழுவடிவம் வருமாறு:-

2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற வடக்குமாகாணசபைஅமர்வில் வடக்கு மாகாண சபையின் கௌரவ அமைச்சர்கள் குறித்துக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் சம்பந்தமாக மாகாண சபையே ஒரு விசாரணைக்குழு அமைக்கவேண்டுமெனநானும் ஒரு பிரேரணையை முன்மொழிந்திருந்தேன்.

தற்போது கௌரவ முதலமைச்சருக்கும், எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும்இடையில்'சுதந்திரமானதும் சட்டபூர்வமானதுமான' விசாரணை நடத்தப்படலாம் என்ற இணைக்கப்பாடுஏற்பட்டிருப்பதனால்–

வடக்குமாகாணசபையின் அனைத்து அமைச்சர்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும்நிறுவனங்களில் நடைபெற்றவை எனக் கூறப்படும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக விசாரித்து சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தெரிவுக் குழுவொன்றைநியமிக்கும்தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

– என்று உள்ளது.

இந்தப் பிரேரணையில் ‘ஊழல்’ என்ற சொற்பதம் நீக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரிகின்றது.

பெரும்பாலும் எதிர்வரும் 6 ஆம்திகதிமாகாணசபைகூடும் போது இந்தப் பிரேரணை எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர். இருப்பினும் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

சம்பந்தப்பட்டமுன்பள்ளிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்சி.சிறீதரன்மற்றும் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர் ஆகியோர் முன்பள்ளி ஆசிரியர்களுடன் நடந்த சம்பவம் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

கிராமத்தின்கிராமஅபிவிருத்திச் சங்கத்தினர் இந்த முன்பள்ளியைப் புனரமைத்துத் தருவார்கள் எனக்குறிப்பிட்டனர்.

இந்தமுன்பள்ளி அடிப்படை வசதிகள் எவையும் அற்று இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர்தமது அமைச்சுகளுக்கு மேலதிகமாக மற்றையஇருஅமைச்சுக்களையும் கவனிப்பது அவருக்குப்பெரும் சுமையாகும். அதனால்தான் இரண்டு அமைச்சுக்களைத் தமக்கு நம்பிக்கையான இருவருக்குத்தற்காலிகமாகவழங்க அவர் தீர்மானித்தார்.

மேலும்இராஜினாமாச்செய்த இருஅமைச்சர்கள்தொடர்பான விசாரணை அறிக்கைகளை மீளாய்வுசெய்ய முடிவுஎடுக்கப்பட்டுள்ளது. மீளாய்வின் பெறுபேறு அந்த இருவருக்கும் சார்பாக அல்லது அவர்களின் ஒருவருக்குச் சார்பாக வருமானால் அந்தப் பதவிகளை அவர்களுக்கு மீள வழங்க வேண்டும். அதுதான் சரியானதாகவும் முறையானதாகவும் இருக்கும்.

அதற்கிடையில் அந்த அமைச்சுப் பதவிகளுக்கு நிரந்தர அமைச்சர் ஒருவரை நியமித்து விட்டால், பின்னர் இடையில் அவரை நீக்க வேண்டி வரும். அதனால் வீண் சிக்கல்கள், குழப்பங்கள் ஏற்படலாம்.

எனவே, மேற்படி அமைச்சர்கள் தொடர்பான அறிக்கையின் மீளாய்வு பற்றிய முடிவு வரும் வரை புதிய இருவரை நிரந்தரமாக அந்த இடத்துக்கு நியமிப்பதைத் தவிர்ப்பதற்கு முதல்வர் விரும்புகின்றார்.

அதனால்தான் தற்காலிக ஏற்பாட்டில் இருவரை அமைச்சர்களாக நியமிக்கின்றமை குறித்து முதல்வர் பரிசீலிக்கின்றார் என அவருடன் தொடர்புடையவட்டாரங்கள்தெரிவித்தன.

கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் தற்போது ஜேர்மனி சென்றுள்ளார். அவர் இரண்டொருநாள்களில்கொழும்புதிரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் இந்தியாவிலும், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மலேசியாவிலும் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

புளொட் தலைவர் சித்தார்த்தன் தற்போது கொழும்பில் உள்ளார்.

பங்காளிக் கட்சித் தலைவர்கள் யாழ் திரும்பியதும் அவர்களை யாழ்ப்பாணத்திலும், சம்பந்தனைக் கொழும்பிலும் சந்தித்துப் பேசுவதற்கு முதல்வர் தீர்மானித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அதன் பின்னரே அவர் தீர்க்கமாக சில விடயங்களில் முடிவு எடுப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தற்காலிகமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் ஒரு நிகழ்வில் கலந்து கொள்ளும் ஆளுநர், பெரும்பாலும் நாளை யாழ். வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் வந்ததும் சத்தியப் பிரமாண நிகழ்வுக்கான நேரம் ஒதுக்கப்படும் எனக் கூறப்பட்டது.

மகளிர் விவகாரம் போன்ற சில விடயங்களை அனந்திக்கு வழங்குவது குறித்துத் தாம் யோசனை கொண்டிருக்கின்றார் என்ற தகவலை முதல்வர் விக்னேஸ்வரன் சில தினங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை நேரில் சந்தித்தபோது எடுத்துரைத்திருந்தார்.

ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட அனந்திக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துவரும் நிலை

பக்கம் 03 >>>

## காரைநகரிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார்.

இந்த விடயத்தை படையினருக்குக் கடிதம் மூலம் அறிவிக்குமாறும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் காரைநகர்பிரதேச செயலாளர் ஈ.தயாரூபனுக்கு பணிப்புரை விடுத்தார்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று காரைநகர் பிரதேச செயலகத்தில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்திருமதிவிஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் காரைநகருக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் ஆராயப்பட்ட போது இங்குள்ள சில நன்னீர்க் கிணறுகளில் இருந்து படையினர் குடிதண்ணீரை எடுத்துச்செல்கின்றனர் எனவும் அதனால் அந்தக் கிணறுகள் விரைவில் உவர் நீராக மாறக் கூடிய அபாயம் உள்ளது எனவும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் விஜயகலா, படையினர் இங்குள்ள நன்னீரை எடுத்துச் செல்ல இடமளிக்க முடியாது. அவர்கள் அவ்வாறு நன்னீர் எடுப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என உத்தரவிட்டார்.

அவர்கள் தமக்கு நன்னீர் தேவை எனில் சுன்னாகம் போன்ற இடங்களில் போய் எடுத்துவர முடியும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, காரைநகரில் உள்ள பொதுமக்களுக்கு காரை. அபிவிருத்திச் சபை, பிரதேச சபை மற்றும் சில தனியார் போன்றோர் சுன்னாகத்தில் இருந்து நன்னீர் கொண்டு சென்று விநியோகிக்கின்ற நிலையில், காரைநகரில் உள்ள சில நன்னீர்க் கிணறுகளில் இருந்து கடற்படையும் இராணுவமும் நன்னீரை எடுத்துச் செல்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட சம்பவம்தொடர்பில்குற்றவாயாகக் காணப் பட்டவருக்கு யாழ்.மேல்நீதிமன்றநீதிபதிமாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று மரணதண்டனைத்தீர்ப்பு வழங்கினார்.

2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வயோதிபப் பெண்ணான லில்லிமேரிஎன்பவர்படுகொலை செய்யப்பட்டமை நிரூபிக்கப்பட்டதை அடுத்து, இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றவாளியின் மனைவி மூன்று மாதங்களின் பின்னர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார்.

இதற்கமைய, 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி நீதிவான் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

இந்தவிசாரணையின்போது குற்றவாளியான தனது கணவருக்கு எதிராக அவரது மனைவியே பொலிஸாருக்கு முதலில் தகவல்களை வழங்கியிருந்தார்.

வழக்கு விசாரணை நிறைவில்,நீதிபதிமாணிக்கவாசகர்இளஞ்செழியன் நேற்று குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்தார்.

குற்றவாளியும் அவரது மனைவியும் கொலையுண்ட லில்லி மேரியின் வீட்டில் வாடகைக்குக் குடியிருந்த சமயம் இந்தப் படுகொலை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அமைச்சர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் பெயர் குறிப்பிட்டு கடிதம் மூலம் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைத்துள்ள பின்புலத்தில் –

மேற்படி கருத்தை முதல்வர் வெளியிட்டிருக்கின்றார்.

இந்த விடயம் குறித்து முதலமைச்சரின் அலுவலகத்தில் இருந்து செய்திக் குறிப்பு ஒன்று கிடைக்கப் பெற்றது. பத்திரிகையாளர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்கு முதல்வர் பதிலளித்தமை போன்ற வடிவத்தில் அது அமைந்திருந்தது. அதன் விவரம் வருமாறு :-

ஊடகத்தின் கேள்வி:- கல்வி அமைச்சரின் இராஜினாமாவால்ஏற்பட்ட வெற்றிடம் நிரப்பப்பட்டுவிட்டதாகக் கூறப்படுவது உண்மையா?

பதில் :- அத்தகைய நியமனம் ஏதும் நடக்கவில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு யார் யாரை நியமிப்பது என்பது குறித்து நான் இன்னும் முடிவெடுக்கவில்லை.

போரின் பின்னரான காலகட்டத்தின் தேவைகளுக்கும் முன்னுரிமைகளுக்கும் அமைவாக (Needs and Priorities) உரிய செயல் முறைகளுக்கும் செயல் நடவடிக்கைகளுக்கும் அமைவாக (Due Process and Procedures) உரிய நேரத்தில் குறிப்பிட்ட நியமனங்கள் என்னால் செய்யப்படும். தற்பொழுது பதவி விலகிய அமைச்சர்களின் அமைச்சுக்களை நானே மேற்பார்வை செய்து வருகின்றேன்.

–இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

## இரணைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுடன் உரையாடுவதற்காகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தன அங்கு செல்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராசா,சி.சிறிதரன்,ஈ.சரவணபவன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றுவர்எனத்தெரிகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், யாழ். அரசாங்க அதிபர், பூநகரி பிரதேச செயலர் போன்றோரும் இந்தச்சந்திப்பில்பங்குபற்றுவர் எனக் கூறப்பட்டது.

இன்று காலை 10 மணிக்கு இரணைப்பாலைதேவாலயத்தில் கவனவீர்ப்புப்போராட்டத்தில்ஈடுபடும்மக்களுடனானசந்திப்புஇடம்பெறும் என்று தெரிகின்றது.

இந்தக்கவனவீர்ப்புப்போராட்டத்தை வழிநடத்திவரும் வணபிதாக்களும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றுவர் என்றும் தெரிய வந்தது. (உ)

## வித்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு நாள்கள் இந்த விசாரணையை நடத்துவதற்குக் கடந்த 12 ஆம் திகதி மேற்படி மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஆயம் கூடித் தீர்மானித்திருந்தது.

இந்த வழக்கில் 9 எதிரிகள் மீது ஆள்கடத்தல், வன்புணர்வு, கொலை, மேற்படி குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தமை உட்பட 41 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

37 சாட்சிகளின் வாக்குமூல அறிக்கைகள் மற்றும் சான்றுப் பொருள்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 37 சாட்சிகளும் வழக்கு விசாரணைகளின் போது நீதிமன்றுக்குச் சமுகம் தரவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளனர். (உ)

காலைக்கதிர்



# மீண்டும் வேலைநிறுத்தத்தில் குதிக்க வைத்திய அதிகாரிகள் சங்கம் முடிவு!

## ஜனாதிபதியுடனான பேச்சில் இணக்கம் காணப்படாததால்



கொழும்பு, ஜூன் 28

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

மாலபேயிலுள்ள 'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நடத்திய பேச்சில், இணக்கம் காணப்படாத யோசனைகள், அரசின் நிலைப்பாடாக அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் தாம் குதிக்கின்றமையைத் தவிர்க்க முடியாது என்று, அந்தச் சங்கத்தின் குழு உறுப்பினர் வைத்தியர் நளிந்த ஹேரத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்களுடன் நடத்திய பேச்சின் போது, சைட்டம் நிறுவனத்துக்கு மாணவர்களைச் சேர்த்து கொள்ளுதல் மற்றும் பட்டங்களை வழங்குதல் ஆகியன வற்றைக் கைவிட்டு, சட்ட ரீதியான நடவடிக்கையை அவசரமாக எடுக்கப்போவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். எனினும், சைட்டம் தொடர்பிலான அரசின் நிலைப்பாடு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், முற்றிலும் மாறுபட்ட விவகாரமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சின் போது, தங்களால் இணக்கம் காணப்படாத கருத்துக்களை அடிப்படையாக வைத்துக் கொண்டே அரசின் நிலைப் பாடு வெளியிடப்பட்டுள்ளது.

சைட்டம் தொடர்பிலான அடிப்படை மதிப்புகளை சட்டமா அதிபர் ஊடாக, உயர் நீதி மன்றத்துக்கு முன்வைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார் .


இலங்கை மருத்துவ சபையின் தலைவர் அல்லது அந்தப் பேரவையின் சுயாதீனத்துக்கு எவ்விதமான ஆபத்தும் ஏற்படுவதற்கு இடமளிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி இதன்போது இணக்கம் தெரிவித்திருந்தார்.

அதேபோல, சைட்டம் பிரச்சினையில், ஏற்பட் டுள்ள அடிப்படை முரண்பாடுகளுக்கு, மக்களுக்கு தீங்கு ஏற்படாதவகையில், தீர்வொன்றைப் பெற்றுக்கொடுத்து, புதிய அனுமதிக்காக வேலைத் திட்டத்தை முன்வைப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார்.

நாட்டில் உருவாகியுள்ள தொற்றுநோய்த் தன்மையைக் கவனத்தில் கொண்டும், ஜனாதிபதியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டை அடிப்படையாகக் கொண்டுமே வேலைநிறுத்தப் போராட்டத்தை நாம் கைவிட்டிருந்தோம். ஜனாதிபதி கேட்டமைக்கு இணங்க, வேலைநிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டிருந்தோம். ஆனால் முற்றாக நிறுத்தவில்லை.

எனினும், எங்களுடன் இடம்பெற்ற பேச்சின் போது இணக்கம் காணப்படாத விடயங்கள், அரசின் அறிக்கையில் உள்ளன. அவை தொடர்பில், நாம் கலந்தாலோசிக்கின்றோம். எம்முடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், அரசு செயற்படாவிடின், கடந்த வெள்ளிக்கிழமை தற்காலிகமாக கைவிட்டிருந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை இன்னும் இரண்டொரு நாள்களில் மீண்டும் தொடர்வோம்.- என்றார். (எ)

## நாளை மின் தடை



உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக் கிழமை -

காலை9மணியில்இருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில் விடத்தல்தீவு கிராமம், தேவன் பிட்டி, வெள்ளாங்குளம், கள்ளியடி, இலுப்பைக் கடவை, மூன்றாம் பிட்டி, கணேசபுரம், வெள்ளாங்குளம், நீர்ப்பாசனத் திணைக்களம், விடத்தற்தீவு வைத்திய சாலை, கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## மாணிக்கவாசகர் குருபூசைத் தினம்

காரைநகர்,ஜூன் 28

மாணிக்கவாசகர்குருபூசைத் தினத்தை முன்னிட்டு காரைநகர்ஈழத்துச்சிதம்பரம் மாணிக்க வாசகர் மடாலயத்தில் இன்று புதன்கிழமை மாணிக்க வாசகர் திருவடியைப் போற்றித் துதிக்கும் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் திருவாசகம் முற்றோதல், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அபிஷேகம், அஷ்டோத்திர சத நாம வழிபாடு, திருவடிகளுக்குப் பூச்சொரிந்து வணங்குதல், மாணிக்கவாசகர் போற்றிப் பனுவல், தலபுராணம் என்பன இடம்பெறும்.

இதேவேளை, அடியவர்கள் மாணிக்கவாசக சுவாமிகளின் அஷ்டோத்திரசதநாமவழிபாட்டு நூலை மடாலயத்தில் பெற்று ஓதிப் பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆலய உற்சவங்கள்

வட்டுக்கோட்டை,ஜூன் 28

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது

இன்று புதன் கிழமை மாலை 7.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் நண்பகல் 12 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

* * *

கச்சாய் புனித பேதுருவானவர் ஆலய நவநாள் திருவிழா கடந்த 20 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இன்று மாலை திருநற்கருணை ஆராதனையும் சிறப்புத்திருப்பலி வழிபாடும் இடம்பெறும். நாளை வியாழக்கிழமை காலை திருநாள் பாடல் திருப்பலி வழிபாடும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும் அன்றைய தினம் இரவு தென்மோடி நாட்டுக் கூத்தும் நடைபெறும். (இ)

## அடிப்படைவாதிகளின் செயல்களால் உலகில் முஸ்லிம்களுக்கு எதிரான நிலை

### அமைச்சர் கபீர் ஹசீம் கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 28

இஸ்லாம் மதத்துக்காகக் குரல் கொடுப்பதாகக் காட்டிக் கொண்டு அடிப்படைவாதிகளின் செயல்களால் உலக முழுவதும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான நிலைப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் பொது முயற்சியாண்மை அமைச்சருமான கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை மாற்ற வேண்டியது முஸ்லிம் மக்களின் கடமை என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புனித ரமழானை முன்னிட்டு மகர சிறைச்சாலையில் உள்ள முஸ்லிம் கைதிகளுக்கு மதிய உணவு வழங்கல் மற்றும் சிறப்பு தொழுகையில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சகல கைதிகளுக்கும் தர்ம ரீதியில் செயற்படும் பொறுப்புள்ளது. நாட்டின் எதிர்காலத்துக்கு அமைய அனைவரும் இலங்கையர்களாக செயற்படுகின்றமை மிகவும் முக்கியமானது.

சிறைச்சாலையில் இருந்து புனர்வாழ்வு பெற்ற பின்னர், சமூகத்துடன் இணைக்கும் போது சில சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இது தொடர்பில் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்து, நீண்டகால தண்டனைகளைப் பெற்றுள்ள கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கும் சந்தர்ப்பத்தை ஏற் படுத்தும் வகையில் அரசுக்கு அமைச்சரவை பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்படும்.-என்றார்.

## யாழ். பல்கலையில் இன்று யோகா தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 28


உலக யோகா தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் ஏற்பாட்டில் யோகா தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

இந் நிகழ்வில் முதலாவது அமர்வு காலை 6 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் மண்டபத்திலும் இரண்டாவது அமர்வு காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எஸ்.சபா ஆனந்த் தலைமையிலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் ஆர்.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத் தலைவர் பேராசிரியர் திருமதி ரி.மிகுந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-ச)

## கிளி.பொதுச்சந்தை வரைபடத்தை அங்கீகரிப்பதற்கான கலந்துரையாடல்



கிளிநொச்சி பொதுச் சந்தையில் அமைக்கப்படவுள்ள கடைத் தொகுதிகளுக்கான வரைபடத்தை அங்கீகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நேற்றுக் காலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொதுச் சந்தை பகுதியில் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா செலவில் கடைத் தொகுதிகளை அமைப்பது தொடர்பாக கடந்த 19ஆம் திகதி கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு அமைவாகவே வரைபடத்தை அங்கீகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாணசபை உறுப்பினர்களான ப.அரியரத்தினம், த.குருகுலராஜா, சு.பசுபதிப்பிள்ளை மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பனைசார் கற்கைநெறி; விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூன் 28

பனை அபிவிருத்திச் சபையினரால் பனைசார் உணவு உற்பத்தி பயிற்சி மற்றும் பனைமர உற்பத்திகளுக்கான அழகு உருப்பயிற்சி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயது தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மூன்று மாதங்கள் இடம்பெறும் இந்தப் பயிற்சிநெறிக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகையாக மூவாயிரம் ரூபா வழங்கப்படும்.

பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை தலைவர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம். (ச)

காலைக்கதிர் Kalaikkathir



# கேப்பாபிலவு மக்கள் நேற்று கொழும்பில் கவனவீர்ப்பு

## ஜனாதிபதியின் செயலாளரோடு சந்திப்பு











கேப்பாபிலவு மக்கள் தமது சொந்தநிலம் கோரி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி அன்று ஆரம்பித்த போர்ாட்டம் நேற்று 119 ஆவதுநாளைஎட்டியுள்ளநிலையில், நேற்றையதினம்கொழும்பில் அவர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

சம உரிமை இயக்கம், முன்னிலை சோலிசக் கட்சி மற்றும் கேப்பாபிலவு மக்கள் இணைந்து நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கொழும்பு – கோட்டை ரயில் நிலையம் முன்பாக இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர்.

அதன்பின்னர் ஜனாதிபதி செயலகம் நோக்கி அவர்கள் பேரணியாகச் செல்ல முயன்றனர். இதையடுத்து பொலிஸார் வீதித் தடையை ஏற்படுத்தினர். கலகமடக்கும் பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ள வாகனங்கள் சகிதம் வருகைதந்து போராட்டக்காரர்களை இடைமறித்தனர்.

பின்னர் போராட்டக்காரர்களில் ஒருதொகுதியினரைப் பொலிஸார் ஜனாதிபதி செயலகத்துக்குள் அழைத்து சென்று அங்கு ஜனாதிபதியின் செயலாளரோடு சந்திப்பொன்றை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

சென்றவர்கள் சந்திப்பை முடித்து வரும்வரை குறித்த இடத்திலேயே தரித்து நின்ற போராட்டக்காரர்கள் சந்திப்புக்கு சென்றவர்கள் வருகை தந்ததும் அவ்விடத்தைவிட்டுக் கலைந்து சென்றனர். (உ)




# அரசமைப்பு விவகாரம் குறித்து இன்று கொழும்பில் செயலமர்வு

கொழும்பு, ஜூன் 28

அரசமைப்பு விவகாரங்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பாக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இன்று முழுநாள் செயலமர்வுநடைபெறவிருக்கின்றது.

தென்னாபிரிக்காவின் முன்னாள் பிரதி பிரதம நீதியரசர் மொஸனெக்கோ இந்த நிகழ்வில் பிரதம வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்குவார்.

இலங்கையின் புதிய அரசமைப்புத் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயம்பதி விக்கிரமரட்ண, எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும்இந்தநிகழ்வை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவர்.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றுவார்.

எம்.பிக்கள், திணைக்களத் தலைவர்கள், ஆளுநர்கள், மாகாணப் பிரமுகர்கள் எனப் பல தரப்பினரும் இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ)

# குற்றத்தை ஒப்புக்கொண்டார் லஸித் மலிங்க

இலங்கைக்கிரிக்கெட்அணியின் வேகப்பந்து வீரர் லஸித் மலிங்க தமது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் மூவர் கொண்ட குழுவால் நேற்று மலிங்க விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். இதன்போதே தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டார்.

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டியின் பின்னர், உரிய அனுமதியின்றி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (ம)

# பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழா



யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குஅதிபர் நா.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணருமான பரமலிங்கம் சத்தியகுமார், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் ஏ.விவேகானந்தம், கௌரவ விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி எவ்.எஸ். அன்ரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல. 30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாரா கி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது